# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

**பாடம் 4**

## பரிசுத்த ஆவியானவர்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1

தெய்வீகம் ........ 2

அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை ........ 2

கட்டமைப்பு ........ 3

இயேசு கருவில் உருவாகுதல் ........ 4

வேதாகம ஆதாரம் ........ 6

பெயர்கள் ........ 7

குணாதிசயங்கள் ........ 9

வேலை ........ 11

சூத்திரங்கள் ........ 13

ஆள்த்துவம் ........ 14

குணாதிசயங்கள் ........ 16

தனித்தன்மை ........ 20

உறவு ........ 23

வேலை ........ 25

சிருஷ்டிப்பு வல்லமை ........ 26

இயற்கை உலகம் ........ 27

ஆவிக்குரிய வரங்கள் ........ 28

தனிப்பட்ட புதுப்பித்தல் ........ 32

பரிசுத்தமாகுதல் ........ 33

கிருபை ........ 35

பொதுவான கிருபை ........ 36

உடன்படிக்கை கிருபை ........ 37

இரட்சிக்கிற கிருபை ........ 39

வெளிப்பாடு ........ 41

பொதுவான வெளிப்பாடு ........ 42

விசேஷித்த வெளிப்பாடு ........ 43

வேத ஒளியூட்டுதல் மற்றும் உள்ளார்ந்த வழிநடத்துதல் ........ 44

முடிவுரை ........ 47



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒவ்வொரு கிறிஸ்தவ மரபிற்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. சில மரபுகள் ஆராதனையை வலியுறுத்துகின்றன. சில மரபுகள் கோட்பாட்டையும் சத்தியத்தையும் வலியுறுத்துகின்றன. சில மரபுகள் சமூக ஈடுபாட்டையும் நல்ல செயல்களையும் வலியுறுத்துகின்றன. சில மரபுகள் விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன. சில மரபுகள் சுறுசுறுப்பான கிறிஸ்தவ வாழ்க்கையை வலியுறுத்துகின்றன. இவை அனைத்தும் நல்ல வலியுறுத்தல்கள் தான்.

ஆனால் பல கிறிஸ்தவர்களால் பெரும்பாலும் கவனிக்கப்படாத அடிப்படை யதார்த்தம் ஒன்று இருக்கிறது, இது நம்முடைய எல்லா முக்கியத்துவங்களையும் ஒன்றிணைக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இந்த நல்ல விஷயங்கள் அனைத்தும் அவரிடமிருந்து தான் வருகின்றன. இந்த விஷயங்களிலும் கிறிஸ்தவ விசுவாசத்தின் மற்ற எல்லா பகுதிகளிலும் நம்மை உற்சாகப்படுத்துபவரும் நமக்கு வல்லமை தருபவரும் அவர் தான். அவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார், நமக்கு இரட்சிப்பை தருவதற்கு உழைக்கிறார். அவர் நமக்குள் இருக்கும் ஜீவன் ஆவார். அவர் வேறு யாருமல்ல, தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் தான்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* பற்றிய நம் தொடரின் நான்காவது பாடம் இது. இந்த பாடத்திற்கு ”பரிசுத்த ஆவியானவர்” என்று தலைப்பு வைத்துள்ளோம், ஏனென்றால் நம்முடைய திரியேக தேவனுடைய மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விசுவாச அறிக்கையில் உள்ள விசுவாச கட்டுரையில் கவனம் செலுத்துவோம்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பரிசுத்த ஆவியானவரைக் குறித்து ஒரே வரியில் நேரடியாகக் கூறுகிறது:

> நான் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்.

விசுவாச அறிக்கையில் அவரைப் பற்றி காணப்படக்கூடிய வேறொரு கூற்று என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் மரியாளின் வயிற்றில் இயேசுவைக் கருவுறச் செய்தார் என்பதாகும். நீங்கள் பார்க்கிறபடி, விசுவாச அறிக்கையானது பரிசுத்த ஆவியானவரைப் பற்றி குறைந்தபட்சம் வெளிப்படையாக மிகக் குறைவான தகவல்களையே தருகிறது. ஆனால் வரலாறு முழுவதும் விசுவாசிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த அவரைப் பற்றிய பல முக்கியமான சத்தியங்களை இது தருகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவர் பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், அவருடைய தெய்வீகத்தன்மையைப் பற்றியும், தேவத்துவத்தில் அவரது முழு அங்கத்துவம் பற்றியும் பேசுவோம். இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு உண்மையான மனிதர், வெறுமனே ஒரு தெய்வீக சக்தி அல்ல என்பதைக் குறிப்பிட்டு அவருடைய ஆள்த்துவம் பற்றி நாம் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, அவர் கடந்த காலத்தில் செய்த வேலையையும், இன்று அவர் தொடர்ந்து செய்து வருவதையும் பற்றி ஆராய்வோம். பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையிலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.

# தெய்வீகம்

பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்தை ஆராய, நாம் இரண்டு திசைகளில் பார்ப்போம். ஒருபுறம், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* ஆவியானவரின் தெய்வீகத்தன்மையில் உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது என்பதைக் காண்போம். மறுபுறம், விசுவாச அறிக்கையின் போதனை குறித்து வேதம் என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம். பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்தன்மை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பேசப்பட்ட விதத்திலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.

## அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

பரிசுத்த ஆவியான நபரைப் பற்றி பேசும்போது, மக்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகளில் ஒன்று, சபை எப்போதும் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்தை உறுதிப்படுத்தவோ அல்லது வெளிப்படையாக கூறவோ செய்ததா அல்லது இல்லையா என்பதுதான். நிசியா விசுவாச அறிக்கையும் நிசியா ஆலோசனை சங்கமும் ஆவியானவரைப் பற்றி முழுமையாக தெளிவுபடுத்தவில்லை என்பதற்கான வரலாற்று பதிவு நிச்சயமாக நம்மிடம் உள்ளது, ஆகையால் வேறொரு ஆலோசனை சங்கம் அழைக்கப்பட்டது. இது சிலர், “சபை எப்போதும் பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தை அறிக்கையிடவில்லை” என்று சொல்ல காரணமாகிவிட்டது. அது தவறு என்று நான் நினைக்கிறேன். ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்குவது ஆலோசனைச் சங்கங்களின் வேலை இல்லை. கள்ள போதனைகளை எதிர்கொள்ளும்போது அவைகளைக் குறித்து சபையின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வரலாற்று மற்றும் பாரம்பரிய போதனைகளின் புரிதலை தெளிவுபடுத்துவதே ஆலோசனைச் சங்கங்களின் நோக்கமாகும். அப்போஸ்தலர்களின் காலம் தொடங்கி சபை பிதாக்களின் பிரகடனத்திலும் சபையின் ஆரம்ப கால இறையியலாளர்களின் போதனையிலும் பரிசுத்த ஆவியின் தெய்வீகம் குறித்து போதிக்கப்பட்டது என்று நம்புவதற்கு நமக்கு நல்ல காரணம் இருக்கிறது என்று நீங்கள் கூறலாம்.
>
> Dr. ஸ்டீவ் ப்ளாக்மோர்

ஆரம்பத்தில் இருந்தே, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யானது பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் அது குறைந்தபட்சம் இரண்டு வழிகளில் ஆவியின் தெய்வீகத்தன்மையை மறைமுகமாக உறுதிப்படுத்துகிறது. முதலாவதாக, அதன் திரித்துவ அமைப்பு பரிசுத்த ஆவியானவரை பிதாவுக்கும் குமாரனுக்கும் முக்கியமான வழிகளில் சமப்படுத்துகிறது. இரண்டாவதாக, இயேசு கருவில் உருவானதைப் பற்றிய விசுவாச அறிக்கையின் விளக்கம் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்பதைக் குறிக்கிறது. விசுவாச அறிக்கையின் கட்டமைப்பிலிருந்து தொடங்கி இந்த இரண்டு சிக்கலான காரியங்களையும் பார்ப்போம்.

## கட்டமைப்பு

முந்தைய பாடத்தில், தேவனின் கோட்பாட்டினுடைய கண்ணோட்டத்தில் நாம் விசுவாச அறிக்கையை அணுகியபோது, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யை மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டதாகக் கருதலாம் என்று குறிப்பிட்டோம். அவை ஒவ்வொன்றும் “நான் விசுவாசிக்கிறேன்” என்று முடிகின்றன. முதல் பகுதி பிதாவாகிய தேவனைக் குறித்த விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறது. இரண்டாவது பகுதி, அவருடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமான இயேசு கிறிஸ்துவை குறித்த விசுவாசத்தைப் பற்றியது. மேலும் மூன்றாவது பகுதி, பரிசுத்த ஆவியானவரைக் குறித்த விசுவாசத்தைச் சுருக்கமாகச் சொல்கிறது, மற்றும் அவர் செய்த ஊழியங்களையும் பட்டியலிடுகிறது.

முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* காலப்போக்கில் மேம்பட்டது, அதன் ஆரம்ப பதிப்புகள் உள்ளூர் ஞானஸ்நான விசுவாச அறிக்கைகளாக இருந்தன. இந்த ஆரம்பகால விசுவாச அறிக்கைகளில் சில இயேசுவைப் பற்றிய கட்டுரைகளுக்கு முன் “நான் விசுவாசிக்கிறேன்” என்ற சொற்களை உள்ளடக்கியிருந்தன. ஆனால் மற்றவர்கள் கி.பி. 700 இல், தரப்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கையின் பதிப்பைப் போல, ”மற்றும்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். ஆனால் அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உபயோகித்த வார்த்தைகள் வேறுபட்டிருந்தாலும், தேவனில் உள்ள மூன்று நபர்களின் படி விசுவாச அறிக்கை பிரிக்கப்பட்டது என்ற கருத்து ஒன்று தான். இந்த பிரிவு சபையால் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த திரித்துவ சூத்திரம் ஒரே தேவன் மட்டுமே இருக்கிறார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது, மேலும் அவர் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்கிற மூன்று நபர்களாய் இருக்கிறார் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

கி. பி.170 முதல் 236 வரை வாழ்ந்த ஆரம்பகால சபை பிதாவான ஹிப்போலிட்டஸ், தனது நாளில் பயன்பாட்டில் இருந்த ஞானஸ்நான விசுவாச அறிக்கையானது திரித்துவ கட்டமைப்பை மிகவும் வெளிப்படையாக ஆக்கியது என்று விளக்கினார். இந்த விசுவாச அறிக்கை அநேகமாக ஒரு உள்ளூர் விசுவாச அறிக்கையாகவே தொடங்கியது, ஆனால் இது மிகவும் வளர்ந்து பரவலான பயன்பாட்டிற்கு வந்தது. அதன் மொழிநடை நவீன *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யுடன் மிகவும் ஒத்திருக்கிறது, மேலும் ஞானஸ்நான கூட்டங்களில் அது பயன்படுத்தப்பட்ட விதம் அதன் வலுவான திரித்துவ முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு நபரை மூன்று முறை நீரில் மூழ்க வைப்பதன் மூலம் ஞானஸ்நானம் செய்யப்பட்டது என்று ஹிப்போலிட்டஸ் விளக்கினார். ஒவ்வொரு முறை நீரில் மூழ்கும்போதும், ஞானஸ்நானம் பெறுகிற நபர், திரித்துவ நபர்களில் ஒருவர் தொடர்பான ஞானஸ்நான விசுவாச அறிக்கையின் பகுதியை உறுதிப்படுத்த வேண்டும். முதலில் அந்த நபர் பிதா தொடர்பான விசுவாசக் கட்டுரைகளில் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டார்; பின்னர் அந்த நபர் நீரில் மூழ்க வைக்கப்பட்டார். அதன் பிறகு குமாரனைப் பற்றிய விசுவாசக் கட்டுரைகளில் விசுவாசம் அறிக்கையிடப்பட்டது, அதைத் தொடர்ந்து இரண்டாவது மூழ்குதல் நிகழ்ந்தது. இறுதியாக, பரிசுத்த ஆவியானவர் தொடர்பான கட்டுரைகளில் விசுவாசம் அறிக்கையிடப்பட்டது, அதன் பிறகு மூன்றாவது மற்றும் இறுதி மூழ்குதல் நிகழ்ந்தது. ஆரம்பகால சபையில் இது மற்றும் இது போன்ற நடைமுறைகள் மூலம், பரிசுத்த ஆவியானவர் உட்பட திரித்துவத்தின் ஒவ்வொரு நபரின் தெய்வீகத்தன்மையையும் பணியையும் முன்னிலைப்படுத்தும் நோக்கில் விசுவாச அறிக்கையின் கட்டமைப்பு வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இயேசு கருவில் உருவாகுதல் பற்றிய அதன் விளக்கம் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை உறுதிப்படுத்தும் இரண்டாவது வழியாகும்.

## இயேசு கருவில் உருவாகுதல்

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை கூறுகிறது.

இந்த அறிக்கை பரிசுத்த ஆவியானவர் முழுமையாக தெய்வீகமானவர் என்று வெளிப்படையாக அறிவிக்கவில்லை, ஆனால் அது இந்த நம்பிக்கையை வலுவாக குறிக்கிறது. இயேசு கருவில் உருவானதைப் பற்றி பேசும்போது, விசுவாச அறிக்கை லூக்கா 1:35 யைக் குறிக்கிறது, அங்கு தேவதூதன் இந்த வார்த்தைகளை மரியாளிடம் பேசினான்:

> பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35).

இந்த வசனத்தில், பரிசுத்த ஆவியானவர் உன்னதமானவரின் வல்லமையுடன் ஒப்பிடப்படுகிறார். தேவனால் மட்டுமே உன்னதமானவரின் வல்லமையை பெற முடியும் என்பதை இந்த பாடத்தில் நாம் பின்னர் பார்ப்போம். ஆகையால் இந்த வசனம் பரிசுத்த ஆவியினுடைய வேலைக்கு உதாரணமாக இருக்கிறது என்று குறிப்பிடுவதன் மூலம், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* ஆவியானவரின் முழு தெய்வீகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. இந்த முடிவை எபிரெயர் 10:5-7 உறுதிப்படுத்தியுள்ளது, இது இவ்வாறு கூறுகிறது:

> ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசித்த போது, அவர் இவ்வாறு சொன்னார்: "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: 'தேவனே – உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் – புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது'" என்று சொன்னேன் என்றார் (எபிரெயர் 10:5-7).

இங்கே, இயேசுவின் மனித சரீரத்தை உருவாக்குவது குறிப்பாக தேவனின் வேலை என்பதாக நமக்குக் கூறப்படுகிறது. இது போன்ற வசனங்களின் வெளிச்சத்தில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை,* இயேசு கருவில் உருவானது பரிசுத்த ஆவியானவரின் மூலம் தான் என்று கூறும்போது, ஆவியின் தெய்வீகத்தன்மையை உறுதிப்படுத்துவதே அதன் நோக்கம் என்று நாம் நிச்சயமாக சொல்லலாம்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை இப்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பார்த்தோம், அது சொல்வதை அறிந்து கொள்ள வேதாகம ஆதாரத்தைப் பார்ப்போம்.

## வேதாகம ஆதாரம்

இன்று நாம் உறுதிப்படுத்தும் நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அங்கீகரிப்பதில் பெரும் மதிப்பு இருக்கிறது. பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையைப் பற்றி *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்ன போதிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள மிகவும் உதவியாக இருப்பதற்கு இது ஒரு காரணம் ஆகும். அப்படியிருந்தும், நம்முடைய மிகப் பெரிய நம்பிக்கை வேதத்திலிருந்தே வருகிறது. நாம் விசுவாச அறிக்கையை வேதத்தின் சுருக்கமாக கருதுகிறோம், வேதத்திற்கு மாற்றாக அதை கருதுவதில்லை. இந்த காரணத்திற்காக, விசுவாச அறிக்கை சொல்வது வேத ஆதாரமானது என்பதை உறுதிப்படுத்துவது நமக்கு எப்போதும் முக்கியமாகும்.

> பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தை உறுதிப்படுத்த வேதம் சுட்டிக்காட்டும் குறைந்தது நான்கு புலன்களையாவது நாம் பார்க்கிறோம் என்று நினைக்கிறேன். முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் சில வேத பகுதிகளில் தேவனுக்கு பதிலாக பயன்படுத்தப்படுகிறார் என்கிற உண்மையாகும். பரிசுத்த ஆவியின் தெய்வத்துவத்திற்கான இரண்டாவது ஆதாரம் என்னவென்றால், தேவனிடம் மட்டுமே இருக்கும் சில குணாதிசயங்கள் ஆவிக்கும் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. மூன்றாவதாக, தேவனால் மட்டுமே செய்யக்கூடிய செயல்களையும் பரிசுத்த ஆவியானவர் செய்கிறார். இறுதியாக, பரிசுத்த ஆவியானவர் – மத்தேயு 28 இல் – கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறுவதில் பரிசுத்த ஆவியானவரின் நாமமும் ஒன்றாக குறிப்பிடப்படுவதை நாம் கவனிக்கிறோம்.
>
> Dr. கெய்த் ஜான்சன்

பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை விசுவாசிப்பதற்கான வேதாகம ஆதாரத்தை பல வழிகளில் நிரூபிக்க முடியும். ஆனால் நம் நோக்கங்களுக்காக, அவர் அழைக்கப்படும் பெயர்கள், அவரில் இருக்கும் குணாதிசயங்கள், அவர் செய்யும் பணி மற்றும் அவரைக் குறிக்கும் திரித்துவ சூத்திரங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவோம். வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிற வெவ்வேறு பெயர்களுடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பெயர்கள்

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தில் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். இந்த பெயர்களில் சில அவரது தெய்வீகத்தன்மையை மறைமுகமாகக் குறிக்கின்றன. மற்றவைகள் அவரை தெய்வீகமானவர் என்று அழைப்பதில் மிகவும் வெளிப்படையாக இருக்கின்றன. இன்னும் சில இந்த இரண்டு உச்சநிலைகளுக்கும் இடையிலான தொடர்ச்சியாக இருக்கின்றன.

அவருடைய தெய்வீகத்தன்மையை மிகவும் மறைமுகமாகக் குறிக்கும் பெயர் “பரிசுத்த ஆவியானவர்” ஆகும். ”பரிசுத்த” என்ற வார்த்தை எந்த வகையிலும் தெய்வீகமாக இல்லாத சிருஷ்டிப்பின் அம்சங்களைக் குறிக்க பயன்படுத்தப்பட முடியும். ”பரிசுத்த” என்ற வார்த்தை பொதுவாக அவற்றின் பொதுவான சக வார்த்தைகள் குறிக்காத வேறுபட்ட விஷயங்களைக் குறிக்கிறது, ஏனென்றால் அவை ஏதோவொரு விதத்தில் தேவனுக்கு விசேஷமாக இருக்கின்றன. ஆகவே, ”பரிசுத்த” என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்பதைக் குறிக்கவில்லை.

அப்படியே, பழைய ஏற்பாடு முழுவதும், ”பரிசுத்தர்” என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுவது தேவனைத் தான் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 2 இராஜா 19:22, ஏசாயா 30:11-15, ஓசியா 11:9-12 போன்ற எண்ணற்ற வேத பகுதிகளில் இதைக் காண்கிறோம். பரிசுத்த ஆவியானவர் என்ற பெயரில் தேவனைக் குறிக்கும் ஏசாயா 63:10-11 போன்ற மற்ற வேத பகுதிகளும் உள்ளன. *ஞான புத்தகம்,* 9:17 போன்ற பரிசுத்த ஆவியின் அக்த்தூண்டுதலால் கொடுக்கப்படாத பண்டைய யூத இலக்கியங்களில் இந்த வகை பெயரிடுதலையும் நாம் காண்கிறோம். இந்த பழைய ஏற்பாட்டின் பின்னணியில், ”பரிசுத்த ஆவியானவர்” என்ற பெயரில் தெய்வீகத்தைக் குறிக்கிற உட்பொருளைக் காண்பது முறையானதாகும்.

இந்த மறைமுகமான பெயர்களை மனதில் கொண்டு, பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையைக் குறிக்கும் மறைமுகமான பெயர்களுக்கும் வெளிப்படையான பெயர்களுக்கும் இடைப்பட்ட சில பெயர்களைப் பார்ப்போம். இந்த பெயர்களில் ”கர்த்தருடைய ஆவி”, ”தேவனின் ஆவி” மற்றும் ”ஜீவனுள்ள தேவனுடைய ஆவி” ஆகியவை அடங்கும். மேலும், “இயேசுவின் ஆவி,” “கிறிஸ்துவின் ஆவி,”மற்றும் “இயேசு கிறிஸ்துவின் ஆவி” ஆகியன ஆகும். மேலும் “உங்கள் பிதாவின் ஆவி,” “அவருடைய குமாரனின் ஆவி”, “இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியவரின் ஆவி” ஆகியவையும் இதில் அடங்கும். இந்த பெயர்கள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் ஒரு மனிதன் தனது சொந்த ஆவியுடன் ஐக்கியப்பட்டிருக்கிறதைப் போல, தேவன் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. 1 கொரிந்தியர் 2 : 11 இல் பவுல் இந்த தொடர்பை வெளிப்படையாக உருவாக்கினார், அங்கு அவர் இந்த வார்த்தைகளை எழுதினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (1 கொரிந்தியர் 2:11).

நம்முடைய ஆவிகள் நம்மை மனிதர்களாக இருக்க வைப்பதற்கான ஒரு பகுதியாகும். அவைகளில் மனிதனுக்கு பொருந்தாதது எதுவும் இல்லை. அவைகள் முழுக்க முழுக்க மனிதத்தன்மையுடையவைகள் தான். அதேபோல், பரிசுத்த ஆவியானவரும் முற்றிலும் தெய்வீகமானவர் ஆவார். இதுதான் பிதாவின் மனதை அறிய அவருக்கு உதவுகிறது. எனவே, தேவனின் மனதை கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தும் வேலையின் மூலம், பரிசுத்த ஆவியானவர் தன்னை தேவன் என்று நிரூபிக்கிறார்.

இறுதியாக, பரிசுத்த ஆவியானவரை "தேவன்" என்ற பெயரில் மிகத் தெளிவாகக் குறிப்பிடும் சில வேத பகுதிகளும் உள்ளன. அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:3-4 இல் அனனியாவிடம் பேதுரு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? … நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:3-4).

இந்த வேத பகுதியில், அனனியா பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னான் என்று பேதுரு முதலில் கூறினார். அனனியா தேவனிடம் பொய் சொன்னதாகக் கூறி அவர் என்ன சொன்னார் என்பதை பேதுரு விளக்கினார். இங்கே அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியானவரை "தேவன்" என்று தெளிவாக அழைத்தார்.

ஆகையால் பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் அழைக்கப்படும் பெயர்களைக் கருத்தில் கொள்ளும்போது, அவைகளில் பல அவருடைய தெய்வீகத்தன்மையை மிகவும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் குறிப்பதைக் காணலாம்.

பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை வேதம் நிரூபிக்கும் இரண்டாவது வழி என்னவென்றால், அவருடைய தெய்வீக குணாதிசயங்களை கூறுவதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# குணாதிசயங்கள்

கிறிஸ்தவ இறையியலாளர்கள் பாரம்பரியமாக தேவனைப் பற்றி பகிர்ந்து கொள்ளக்கூடிய குணாதிசயங்கள் மற்றும் பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயங்கள் என இரண்டு தனித்துவமான குணாதிசயங்கள் இருப்பதாக கூறுகின்றனர். ஒருபுறம், அவர் பகிர்ந்து கொள்ளக்கூடிய குணாதிசயங்களைக் கொண்டுள்ளார், இது சிருஷ்டிகளுடன் ஒருவிதத்தில் “பகிர்ந்து கொள்ளப்பட” முடியும்.

உதாரணமாக, தேவனிடம் பகுத்தறியக்கூடிய குணாதிசயம் உள்ளது, அதை அவர் மனிதர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். எல்லைக்கு உட்பட்ட சிருஷ்டிகளாக, மனிதர்கள் தேவனுடைய பகுத்தறிவை முழுமையாக புரிந்து கொள்வதில்லை. ஆனால் நியாயமான வழிகளில் சிந்திக்கும் திறன் நமக்கு இன்னும் இருக்கிறது. நிச்சயமாக நாம் தெய்வத்தன்மை உடையவர்கள் என்று இதற்கு அர்த்தமல்ல. ஒரு பகுத்தறிவுள்ள தேவனால் நாம் சிருஷ்டிக்கப்பட்டோம் என்பதை இது நிரூபிக்கிறது, அவர் தனது பகுத்தறியும் குணாதிசயத்தின் ஒரு அளவை நம்மிடம் பகிர்ந்தார். நம்முடைய பகுத்தறிவு அவரிடமிருந்து வந்ததாகும்; நாம் அவருடைய சிருஷ்டிகள் என்பதால் அவருடைய பகுத்தறிவின் குணாதிசயங்களை பிரதிபலிக்கிறோம்.

தேவனுக்கு இருக்கக்கூடிய மற்றொரு குணாதிசயம் அவருடைய அன்பாகும். மற்றவர்களிடமும் தேவனிடமும் நாம் செலுத்தும் அன்பு தேவனுடைய குணாதிசயமான அன்பிலிருந்து நேரடியாக உருவானது என்று வேதத்தில் பல இடங்கள் போதிக்கின்றன. கலாத்தியர் 5:22, எபேசியர் 5:1, 2 தீமோத்தேயு 1:7, மற்றும் 1 யோவான் 4:7-21 போன்ற இடங்களில் இதைக் காண்கிறோம்.

ஆனால் தேவன் பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயங்களையும் கொண்டிருக்கிறார் – அவற்றின் இயல்பின் காரணமாக அவை அவருடைய சிருஷ்டிகளுடன் பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயங்கள் ஆகும். பின்வருபவை தேவனுடைய மிகவும் நெருங்கிய குணாதிசயங்கள் ஆகும். முதலில் அவருடைய சர்வ ஞானம் ஆகும், இது அவருடைய வரையறையற்ற புத்திசாலித்தனத்தையும், அறிவையும், ஞானத்தையும் குறிக்கிறது; பிறகு அவருடைய சர்வ வல்லமை ஆகும். இது அவருடைய எல்லையற்ற வல்லமையைக் குறிக்கிறது; பிறகு அவர் சர்வ இடங்களிலும் வியாபித்திருக்கும் தன்மையாகும், இது அவர் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்கும் தன்மையைக் குறிக்கிறது; பிறகு அவரது நித்தியம் ஆகும், இது அவரது நித்திய மற்றும் உடைக்க முடியாத சுய-இருப்பைக் குறிக்கிறது. தேவனின் பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயங்கள் அவருக்கு மட்டுமே சொந்தமானவை என்பதால், இந்த குணாதிசயங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை அவரிடம் இருப்பதைக் காண்பிப்பதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதை நாம் நிரூபிக்க முடியும். நாம் வேதத்தை ஆய்வு

செய்யும்போது, உண்மையில், இந்த எல்லா குணாதிசயங்களும் அவரிடம் இருக்கின்றன. முதலில் பரிசுத்த ஆவியின் சர்வ ஞானத்தைப் பற்றி கவனியுங்கள்.

ஆவியானவர் தேவனுடைய மனதை நன்கு அறிவார் என்று வேதம் கூறுகிறது. இந்த கருத்தை எபேசியர் 1:17 மற்றும் 1 கொரிந்தியர் 2:10-11 ஆகியவற்றில் காண்கிறோம். நிச்சயமாக, தேவனுடைய மனம் எல்லையற்றது, அதைச் சரியாக அறிய அதற்குச் சமமான எல்லையற்ற மனம் தேவைப்படுகிறது. தேவனுடைய சர்வஞானமுள்ள மனதைப் புரிந்துகொள்ள பரிசுத்த ஆவிக்கு இருக்கிற வல்லமையால், பரிசுத்த ஆவியானவர் எல்லாம் அறிந்தவர் என்பது நிரூபிக்கப்படுகிறது. அவர் எல்லாம் அறிந்தவர் என்பதால், அவரும் தேவனாக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் அவருடைய சர்வ வல்லமையினால் தேவன் என்று நிரூபிக்கப்படுகிறார். அவருடைய வல்லமை தேவனுடைய வரம்பற்ற வல்லமையாகும். 1 சாமுவேல் 10:6, ரோமர் 15:19, 1 கொரிந்தியர் 12:11, 1 தெசலோனிக்கேயர் 1:5 போன்ற வேதத்தில் உள்ள பல பகுதிகள் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பற்றி பேசுகின்றன. ஆதியாகமம் 1:1-3 இல் தேவனுடைய வல்லமையுடன் பரிசுத்த ஆவியின் தொடர்பை கவனியுங்கள்:

> ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் ”வெளிச்சம் உண்டாகக்கடவது” என்றார், வெளிச்சம் உண்டாயிற்று (ஆதியாகமம் 1:1-3).

நாம் முன்பே குறிப்பிட்டபடி, தேவனைப் பற்றிய பழைய ஏற்பாட்டு குறிப்புகள் பொதுவாக முழு திரித்துவத்தையும் குறிக்கின்றன. ஆனால் மொழி மற்றும் சூழலுக்கு ஏற்ப ஒரு நபர் அல்லது இன்னொரு நபருக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் முறையானதாகும். இந்த விஷயத்தில், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியானவராக வலியுறுத்தப்படுகிறார். ஆகவே, வெளிச்சத்தை உண்டாக்கும் பணி பரிசுத்த ஆவியினால் செய்யப்பட்டது. இந்த அதிகாரத்தில் தேவன் சிருஷ்டித்த எல்லாவற்றிலும் இது தான் நடந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அத்தகைய சர்வ வல்லமையைப் பெற்றிருக்கவும் அவர் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை சிருஷ்டிக்கவும் அவர் முழுமையாக தெய்வீகமாக இருந்திருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் கொண்டிருக்கும் மற்றொரு பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயம் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையாகும். சங்கீதம் 139:7-10 போன்ற பகுதிகள், வானத்தின் உயரத்திலிருந்து, கடலின் ஆழம் வரை சிருஷ்டிப்பின் ஒவ்வொரு பகுதியிலும் ஆவியானவர் இருப்பதை நமக்குக் போதிக்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவருக்கு நித்திய குணாதிசயமும் உண்டு. எபிரெயர் 9:14 பரிசுத்த ஆவியானவரை "நித்திய ஆவி" என்று குறிப்பிடுகிறது, அதாவது அவர் எப்போதும் இருந்திருக்கிறார், என்றென்றும் நிலைத்திருப்பார் என்பதே இதன் அர்த்தமாகும்.

இந்த பகிர்ந்து கொள்ள முடியாத குணாதிசயங்களின் மூலமாகவும், அவைகளைப் போன்ற மற்ற குணாதிசயங்களிலிருந்தும், பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது.

## வேலை

பரிசுத்த ஆவியின் தெய்வீகத்திற்கான வேதத்தில் காணப்படக்கூடிய மூன்றாவது ஆதாரம் அவர் செய்யும் வேலை வகையாகும். பிறகு இந்த பாடத்தில் பரிசுத்த ஆவியின் வேலையை மிக ஆழமாக ஆராய்வோம். இந்த கட்டத்தில், அவருடைய தெய்வீகத்தன்மையை அவரது சில வேலைகள் எவ்வாறு நிரூபிக்கின்றன என்பதைக் காண அவைகளை விரைவாகப் பார்க்க விரும்புகிறோம்.

> வேதத்தில் இருக்கும் சான்றுகளின் ஒரு பகுதி அவருடைய வேலைகளை ஆராய்வதாகும். கிறிஸ்துவைக் குறித்து சாட்சியம் அளிப்பவரும், கிறிஸ்துவிடம் நம்மைச் சேர்ப்பவரும், புதிய ஜீவனை கொண்டுவருபவரும், உயிர்த்தெழுதலை நிகழ்த்துபவரும் மற்றும் சிருஷ்டிப்பில் ஈடுபடுபவரும் தேவனுடைய ஆவியானவரே. இந்த வேலைகள் அனைத்தும் தேவனுடைய வேலைகளை விட குறைவானவை அல்ல. அவை மனிதர்களுக்குப் பொருந்தாது; அவை தேவதூதர்களுக்கோ அல்லது வேறு எந்த சிருஷ்டிக்கப்பட்டவற்றுக்கோ பொருந்தாது. தேவனால் மட்டுமே செய்ய முடிந்த காரியங்கள் அவை. அந்த அடிப்படையில், பரிசுத்த ஆவியானவர் தேவனின் கிரியைகளைச் செய்கிறார் என்பதைக் காண்கிறோம், ஆகவே அவர் ஒரு தனிப்பட்ட நபர் மட்டுமல்ல, தெய்வீகமானவரும் கூட.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

தேவன் மட்டுமே செய்யப் பொருத்தமான வேதம் குறிப்பிடும் செயல்களையும் தெய்வீக வல்லமை மற்றும் குணாதிசயங்களை வெளிப்படுத்துகிற காரியங்களையும் பரிசுத்த ஆவியானவர் செய்கிறார். உதாரணமாக, ரோமர் 8:11 இல் நாம் வாசிப்பது போல, அவர் நம்முடைய ஆவிகளை மறுபிறப்பு அடையச் செய்து புதிய ஜீவனை உருவாக்குகிறார். எபேசியர் 2:18 இல் நாம் போதிக்கப்படுவது போல, நாம் பிதாவிடம் போவதற்கான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சிலாக்கியமும் அவர் தான். ரோமர் 5 - 8 இல் நாம் கற்றுக்கொள்வதைப் போல அவர் நம்மீது இரட்சிப்பை நடைமுறைப்படுத்துகிறார். ரோமர் 15:4,19 போன்ற பகுதிகளில் நாம் காண்கிறபடி, தீர்க்கதரிசிகளின் அற்புதங்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அற்புதங்களுக்கும் பின்னால் உள்ள வல்லமை அவருடையதாகும். பரிசுத்த ஆவியின் தெய்வீக செயல்களின் பட்டியல் கிட்டத்தட்ட முடிவில்லாதது என்றாலும், உதாரணத்துக்காக ஒரு சில முக்கிய எடுத்துக்காட்டுகளில் நம் கவனத்தை செலுத்துவோம்.

முதன்முதலில், பரிசுத்த ஆவியானவர் வேதம் எழுதப்படுவதற்கு அகத்தூண்டினார், இது தேவனுடைய வார்த்தையாகும். பரிசுத்த ஆவியின் வார்த்தை தேவனுடைய வார்த்தை என்பதை அங்கீகரிப்பதில், பரிசுத்த ஆவியானவர் தேவன் தான் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இந்த கருத்தை மத்தேயு 10:20, யோவான் 3:34, அப்போஸ்தலர் 1 : 16 மற்றும் 4:31, எபேசியர் 6:17 ஆகியவற்றில் காண்கிறோம். ஒரு உதாரணத்திற்கு, 2 பேதுரு 1:20-21 இல் உள்ள பேதுருவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:20-21).

இந்த வேத பகுதியில், பரிசுத்த ஆவியினால் ஏவப்படுவது என்பது தேவனிடமிருந்து பேசுவதாக அர்த்தம் என்று பேதுரு கற்பித்தார். வேதம் என்பது தேவனுடைய வார்த்தையாகும், ஏனெனில் இது தேவனால் குறிப்பாக, தேவனின் மூன்றாவது நபராக இருக்கிற பரிசுத்த ஆவியானாரால் அகத்தூண்டப்பட்டு பேசப்படுகிறது.

மற்றொரு உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாக செயல்படுவது அவர் தெய்வீகமானவர் என்பதைக் காட்டுகிறது. யோவான் 14–16 இல், சத்தியத்தை வெளிப்படுத்துதல், பாவத்தைக் குறித்து உலகை கண்டித்து உணர்த்துதல், இயேசுவைக் குறித்து சாட்சியம் அளித்தல் போன்ற செயல்களைச் செய்யும் தேற்றரவாளன் என்று பரிசுத்த ஆவியானவரை இயேசு குறிப்பிட்டார். முதலில் இது தோன்றுவது போல இல்லாமல், இந்த ஊழியம் பரிசுத்த ஆவியானவரை இயேசுவின் பூமிக்குரிய பிரசன்னத்தைக் காட்டிலும் மிகவும் மதிப்புமிக்கதாக ஆக்குகிறது. யோவான் 16:7 இல் இயேசு சொன்னது போல:

> நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்: நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரரார்;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் (யோவான் 16:7) .

இதைப் பற்றி ஒரு கணம் சிந்தியுங்கள். இயேசு கூறியதன் படி, இயேசுவின் சரீர பிரசன்னம் நம்முடன் இருப்பதை விட பரிசுத்த ஆவி சபையுடன் இருப்பது சிறந்தது. ஆனால் ஒரு சிருஷ்டிக்கப்பட்ட, எல்லைக்குட்பட்ட ஒருவர் ஒருபோதும் கிறிஸ்துவின் பூமிக்குரிய பிரசன்னத்தின் ஆசீர்வாதத்தை விட அதிகமான ஆசீர்வாதமாக இருக்க முடியாது. இல்லை, குமாரனாகிய தேவனை விட பரிசுத்த ஆவியானவர் நமக்கு அதிக பிரயோஜனம் உடையவராக இருகவேண்டுமென்றால், ஆவியானவர் தாமே தேவனாக இருக்க வேண்டும்.

## சூத்திரங்கள்

பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை வேதம் உறுதிப்படுத்தும் நான்காவது வழி, திரித்துவ சூத்திரங்கள் மூலம், அவருடைய நாமத்தை பிதா மற்றும் குமாரனுடன் சேர்த்துக் கொள்ளுவதாகும்.

ஒரு திரித்துவ சூத்திரம் என்பது வேதத்தில் உள்ள ஒரு வேத பகுதியாகும், இது திரித்துவத்தின் மூன்று நபர்களையும் பொதுவாக அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து செயல்படுவதை காட்டுவதன் மூலம் ஒப்பீட்டளவில் அவர்கள் சமம் என்கிறதை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரை சமமானவர்கள் என்று குறிப்பிடுவதன் மூலம், பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனைப் போலவே தெய்வீகமானவர் என்பதை வேதம் குறிக்கிறது. இந்த சூத்திரங்களை ரோமர் 15:30, 1 கொரிந்தியர் 12:4-6, 2 தெசலோனிக்கேயர் 2:13-14 மற்றும் பல இடங்களில் காண்கிறோம். இந்த சூத்திரங்களைக் குறித்து இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

இதில் முதலாவதை மத்தேயு 28:19 இல் காணலாம், அங்கு இயேசு இந்த கட்டளையை வழங்கினார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் (மத்தேயு 28:19).

இந்த சூத்திரத்தில், திரித்துவத்தின் மூன்று நபர்களின் நாமத்திலோ அல்லது அதிகாரத்திலோ ஞானஸ்நானம் செய்யப்பட வேண்டும் என்று இயேசு சுட்டிக்காட்டினார். இந்த கட்டளை தேவத்துவத்தில் இருக்கிற நபர்களுடைய கனத்திற்கு இடையில் ஒப்பீட்டளவில் வேறுபாட்டைக் காட்டவில்லை. மாறாக, இது மூவரையும் சமமாக காட்டுகிறது.

இரண்டாவது தெளிவான உதாரணம் 2 கொரிந்தியர் 13:14 இல் காணப்படுகிறது, அங்கு பவுல் இந்த வார்த்தைகளை எழுதினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக (2 கொரிந்தியர் 13:14).

பவுல் தனது கடிதத்தின் இறுதி வாழ்த்துதலில், குமாரனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்றும் பிதாவை தேவன் என்றும் வெறுமனே குறிப்பிட்டு; பரிசுத்த ஆவியானவரையும் குறிப்பிடுகிறார். அவ்வாறு, அவர் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை வழங்குவதில் மூன்று நபர்களையும் சம பங்காற்றுகிறவர்களாக முன்வைத்தார்.

இது போன்ற சூத்திரங்கள் பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் உள்ள மற்ற நபர்களுடன் சமமாக இருக்கிறார் என்பதைக் குறிக்கின்றன. தெய்வீக குணாதிசயங்களை உள்ளடக்கிய காரியங்களிலும் பாவிகளுக்கு கிருபை மற்றும் இரட்சிப்பை வழங்குதல் மற்றும் தேவனாக கனம் மற்றும் ஆராதனையை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற செயல்பாடுகளிலும் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகிய மூன்று நபர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றனர்.

> திரித்துவத்தின் கிறிஸ்தவ கோட்பாடு, ஒரு தேவன் நித்தியமாக மூன்று நபர்களாக ஒன்றாக இருப்பதைக் போதிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதால், நாம் அவரிடம் ஜெபிப்பது மட்டுமல்லாமல், அவரை தேவனாக கனம் பண்ணுவதும் சரியானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும்.
>
> Dr. கெய்த் ஜான்சன்

இப்போது நாம் பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையைக் கருத்தில் கொண்டுள்ளதால், நம்முடைய இரண்டாவது தலைப்பான அவருடைய ஆள்த்துவத்திற்கு திரும்பத் தயாராக இருக்கிறோம். இந்தப் பிரிவில், பரிசுத்த ஆவியானவரை நாம் ஒரு உண்மையான நபராக நினைக்க வேண்டும், வெறுமனே ஒரு தெய்வீக சக்தியாகவோ அல்லது வல்லமையாகவோ கருதக் கூடாது.

# ஆள்த்துவம்

சபை வரலாறு முழுவதும், பல பிரிவினர் பரிசுத்த ஆவியானவர் ஒரு தனித்துவமான சுய விழிப்புணர்வும் தெய்வீக குணாதிசயங்களையும் கொண்ட ஒரு நபர் என்பதை மறுத்துள்ளனர். அவர் வெறுமனே வேறொரு ரூபத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உள்ள பிதா என்று சிலர் நம்புகிறார்கள். ”பரிசுத்த ஆவியானவர்” என்பது தேவனின் வல்லமையை விவரிக்க பண்டைய எழுத்தாளர்கள் பயன்படுத்திய ஒரு பெயர் என்று மற்றவர்கள் வாதிட்டனர். ஆனால் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யின் கட்டமைப்பிலிருந்து, பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் உள்ள உண்மையான மற்றும் தனித்துவமான நபர் என்ற வேதாகம நிலைப்பாட்டை இது உறுதிப்படுத்துகிறது என்பதைக் காணலாம். இது வேதத்தின் தெளிவான போதனையாகும், மேலும் இது கிறிஸ்தவ சபையின் ஒவ்வொரு கிளையிலும் பல யுகங்களாக நிலைப்படுத்தப்பட்டு வருகிறது.

> பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் தனி நபராக விவரிக்கப்படுகிறார், அவர் ஆள்த்துவமில்லாத சக்தி இல்லை. சபையிலுள்ள மற்றவர்கள் அந்த சாட்சியைச் சுற்றி கூடி, நாங்கள் நம்புவதும் இதுதான் என்று கூறினார்கள். பிற்கால விசுவாச அறிக்கையில் இதை வெளிப்படுத்தும் வகையில், இது பற்றி ஒரு உண்மையான விவாதம் நடைபெறுவதற்கு முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகள் ஆனது என்பது உண்மைதான். ஆனால் நான்காம் நூற்றாண்டில் செசரியாவின் பேசில் அதைப் பற்றி விவாதிக்கும்போது, அவர் ஒரு புதிய கோட்பாட்டை வெளிப்படுத்தவில்லை, முந்நூறு ஆண்டுகளாக மக்கள் ஏற்கனவே நம்பியிருந்ததை அவர் அட்டவணையில் கொண்டு வருகிறார்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இந்த விஷயங்களை வெளிப்படையாக பேசவில்லை என்பதை தொடக்கத்திலிருந்தே நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவத்தின் முதல் சில நூற்றாண்டுகளில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய முக்கியமான இறையியல் விவாதங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, திரித்துவத்தின் ஒரு உறுப்பினராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்கிற விசுவாச அறிக்கையின் உறுதிப்பாடு அவருடைய ஆள்த்துவத்தின் உறுதிப்பாடு என்பதை நாம் காணலாம். மீதமுள்ள வேதாகம கிறிஸ்தவத்துடன், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* தேவனுடைய ஆவியானவரை வெறும் சக்தியாகவோ அல்லது தெய்வீக வல்லமையாகவோ மாற்றுவதை நிராகரிக்கிறது.

பரிசுத்த ஆவியின் ஆள்த்துவத்தைக் குறித்த விசுவாச அறிக்கையின் உறுதிப்பாட்டை வேதத்தின் அடிப்படையில் நாம் கருத்தில் கொள்ளும்போது, நம் விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், பரிசுத்த ஆவியானவரிடம் இருக்கும் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பார்ப்போம். இரண்டாவதாக, பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் அவர் தனிப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விதத்தில் வேறுபட்டிருப்பதை கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, திரித்துவத்தின் மற்ற உறுப்பினர்களுடனான அவரது தனிப்பட்ட உறவை விவரிப்போம். பரிசுத்த ஆவியானவர் ஒரு முழு நபர் என்பதை நிரூபிக்கும் குணாதிசயங்களுடன் தொடங்குவோம்.

## குணாதிசயங்கள்

பரிசுத்த ஆவியின் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பற்றி நாம் பேசும்போது, நபர்களுக்கு மட்டுமே இருக்கும் தனித்துவமான அந்த குணங்களை நாம் நினைக்கிறோம் – அவர் வெறுமனே ஒரு சக்தியாக இல்லாமல் ஒரு உண்மையான மனிதராக இருப்பதால் இது அவருக்கு மட்டுமே பொருந்தும்.

> புதிய ஏற்பாடு பிதாவாகிய தேவனின் பெயர்களையும், பட்டங்களையும், அவருடைய கிரியைகளையும், அவருடைய குணாதிசயங்களையும், அவருடைய செயல்களையும் பற்றி மட்டும் பேசாமல் அது குமாரனையும் பரிசுத்த ஆவியையும் பற்றி அதே காரியங்களை பேசுகிறது என்பது நாம் புதிய ஏற்பாட்டில் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேதத்தில் பிதாவாகிய தேவனுக்கு உள்ளதாக கூறப்படும் அனைத்து தனிப்பட்ட பண்புகளும் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கும் இருப்பதாக கூறப்படுகின்றன. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் ஆவார், ஒரு சக்தியோ அல்லது வல்லமையோ அல்ல என்பதை இது மீண்டும் நமக்கு வலியுறுத்துகிறது.
>
> Dr. ஜே. லிகோன் டங்கன் III

பரிசுத்த ஆவியானவருக்கு பல தனிப்பட்ட குணாதிசயங்கள் இருப்பதால் அவை எல்லாவற்றையும் இந்தப் பாடத்தில் பட்டியலிட முடியாது, எனவே அவருடைய ஆள்த்துவத்தை நிரூபிக்க நான்கு உதாரணங்களை வழங்குவோம். பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு சித்தம் இருக்கிறது. இதிலிருந்து நாம் தொடங்குவோம். திட்டமிடவும், விரும்பவும், தேர்வு செய்யவும் அவர் பயன்படுத்தும் ஒரு மன ஆற்றல் இதுவாகும். இந்தக் காரியங்களை செய்ய முடிந்தவர் வெறும் சக்தியாகவோ வல்லமையாகவோ இருக்க முடியாது. அவருடைய சித்தத்தைக் குறிக்க ஒரு உதாரணமாக, 1 கொரிந்தியர் 12:11 யைக் கவனியுங்கள், அங்கு ஆவிக்குரிய வரங்ககள் பகிர்ந்து அளிக்கப்படுவதை பற்றி பவுல் பேசினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 12:11).

பரிசுத்த ஆவியானவர் சிலர் ஒரு குறிப்பிட்ட வரங்களையும், மற்றவர்கள் மற்ற வரங்களையும் பெற வேண்டுமென விரும்புகிறார். ஆள்த்துவமில்லாத சக்திகளுக்கு திட்டங்களும் விருப்பங்களும் இல்லை. நபர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். ஆகையால், பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் புத்திசாலித்தனத்தின் குணாதிசயங்களையும் கொண்டிருக்கிறார், இதன் மூலம் அவர் அறிவையும் மற்றவர்களுக்கு கற்பிக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கிறார். 1 கொரிந்தியர் 2:10-12 இல் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார் என்று நாம் வாசிப்பது போலவும், ரோமர் 8:27 இல் தனது சிந்தை இன்னதென்று அறிகிறார் என்று நாம் வாசிப்பது போலவும் அவர் இந்த புத்திசாலித்தனத்தை பல வழிகளில் வெளிப்படுத்துகிறார். 1 கொரிந்தியர் 12:8 இல் கூறப்படுவது போல அவர் ஞானத்தையும் அறிவையும் தருகிறார். மேலும் அவர் லூக்கா 12 : 12 இல் போதிக்கிறார்.

யோவான் 14:26 இல் ஆவியின் புத்திசாலித்தனத்தைப் பற்றி இயேசுவே பேசினார். அங்கிருந்த அப்போஸ்தலர்களிடம் அவர் சொன்னதைக் கவனியுங்கள்:

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:26).

ஆள்த்துவம் இல்லாத சக்திகளால் சிந்திக்கவோ அறிந்துகொள்ளவோ அல்லது போதிக்கவோ முடியாது. ஆகவே புத்திசாலித்தனத்தின் குணாதிசயம் ஆவி ஒரு நபர் என்பதை நிரூபிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் மற்ற நபர்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு பதிலளிக்கும் விதமாக உணர்ச்சிகள், உள் உணர்வுகள் மற்றும் பாசங்களை வெளிப்படுத்துகிறார். அவரது மற்ற ஆள்த்துவ குணாதிசயங்களைப் போலவே, அவரது உணர்ச்சிகளும் அவர் வெறுமனே ஒரு சக்தி அல்ல, அவர் ஒரு நபர் என்பதை நிரூபிக்கின்றன. உதாரணமாக, பரிசுத்த ஆவியின் அன்பைப் பற்றி ரோமர் 15:30 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய சந்தோஷத்தைப் பற்றி 1 தெசலோனிக்கேயர் 1:6 இல் பேசப்படுகிறது. எபேசியர் 4:30 இல் அவருடைய துக்கத்தைப் பற்றி பேசப்படுகிற விதத்தைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 4:30).

பரிசுத்த ஆவியானவர் துக்கம் போன்ற உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறார் என்பது அவர் ஒரு உண்மையான நபர் என்பதைக் காட்டுகிறது.

மேலும், சுயமாக முடிவெடுக்கும் திறன் என்று நாம் அழைப்பதை ஆவியானவர் கொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு சித்தம் உள்ளது, அதாவது காரியங்களை எண்ணும் திறன் மற்றும் தனது சொந்த விருப்பப்படி செயல்படும் திறன் அவருக்கு இருக்கிறது. நபர்களால் மட்டுமே செய்யக்கூடிய பல செயல்களைச் செய்ய இது அவருக்கு உதவுகிறது. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் யோவான் 15:26 மற்றும் ரோமர் 8:16 ஆகியவற்றில் சாட்சி கொடுக்கிறார். பிலிப்பியர் 2:1 இல் அவர் நம்மோடு ஐக்கியம் வைக்கிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:29 மற்றும் 13:2 இல் அவர் பேசுகிறார் மற்றும் கட்டளையிடுகிறார். ஒரு உதாரணத்திற்கு, எபிரெயர் 8:26-27 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:

> ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்…. ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26-27).

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்காக வேண்டுகிறார் என்பது அவருடைய ஆள்த்துவத்தின் மற்றொரு உதாரணமாகும். நபர்களல்லாத சக்திகளாலும் வல்லமைகளாலும் வேண்டுதல் செய்யவோ பரிந்து வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்யவும் முடியாது. நபர்களால் மட்டுமே இதை செய்ய முடியும்.

1834 முதல் 1892 வரை வாழ்ந்த சிறந்த பாப்டிஸ்ட் போதகரான சார்லஸ் ஸ்பர்ஜன், ரோமர் 8:26-27 ஐ அடிப்படையாகக் கொண்ட தனது *பரிசுத்த ஆவியானவரின் பரிந்து பேசுதல்* பற்றிய பிரசங்கத்தில் இவ்வாறு பேசினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.

> பரிசுத்த ஆவியானவர் நம் சரீரம் மற்றும் மனதின் பலவீனத்தைத் தாங்க உதவுகிறார்; உடல் வலியாக இருந்தாலும், அல்லது மனச்சோர்வுவாக இருந்தாலும், அல்லது ஆவிக்குரிய போராட்டமாக இருந்தாலும், அல்லது அவதூறாக இருந்தாலும், அல்லது வறுமையாக இருந்தாலும், அல்லது துன்புறுத்தலாக இருந்தாலும் அந்த சிலுவையைத் தாங்க அவர் நமக்கு உதவுகிறார். அவர் நம் பலவீனத்தில் உதவுகிறார்; தெய்வீகமான பலமுள்ள ஒரு உதவியாளர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு இருக்கையில் நாம் முடிவுக்காக பயப்படத் தேவையில்லை. தேவனுடைய கிருபை நமக்கு போதுமானதாக இருக்கும்; அவருடைய பலம் பலவீனத்தில் பூரணமாய் விளங்கும்.

எனக்குள் ஏதோ கிரியை நடக்கிறது, எனக்குள் ஒருவர் கிரியை செய்கிறார், அவர் என்னை விட மிகவும் பலம் வாய்ந்தவர் என்பதை அறிந்து கொள்வது ஊக்கமளிக்கிறது. மேலும் நான் சில சமயங்களில் உதவியற்றவனாகவும், அடிமைப்படுத்தப்பட்டவனாகவும், அது ஏதுவாக இருந்தாலும் உணர்கிறேன், ஆனால் அது பேசும் உணர்வுகள் மட்டுமே; அது உண்மை அல்ல. சர்வவல்லமையுள்ள பரிசுத்த ஆவியான தேவன் என்னை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக இடைவிடாமல் மாற்றுகிறார் – இது ஒரு பெரும் ஊக்கமாகும்! இது மிகவும் முக்கியமான காரியம், ஏனென்றால் நான் எப்போதும் ஒரு ஜீவனுள்ள தேவனின் முன்னிலையில் இருக்கிறேன், எப்போதும் தேவனின் முகத்திற்கு முன்பாகவே வாழ்கிறேன். இது தான் இதன் அர்த்தம் ஆகும். என் வீழ்ச்சியை மற்றவர்களிடமிருந்து நான் மறைக்கக்கூடும் என்றாலும், இரகசிய பாவம் என்று எதுவும் இல்லை, ஏனென்றால் தேவன் முன்னிலையில் நான் வாழ்கிறேன். பரிசுத்த ஆவியானவர் ஒரு பரிசுத்தமுள்ள ஆவியாவார்; தேவனுடைய ஆவி தூய்மையானவர். பாவத்துடன் போராடும் மக்களுக்கு ஆலோசனை வழங்குவதால் நான் ஒரு போதகராக நிச்சயமாக அந்த சமநிலையை அடைய விரும்புகிறேன். நம்பிக்கையில்லாமல் இருக்க வேண்டாம். பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்திலும் உங்கள் வாழ்க்கையிலும் செயல்படுகிறார், பாவத்துடனான உங்கள் போராட்டங்களில் உங்களுக்கு வெற்றியைத் தருவதற்காக கிறிஸ்துவை நம்பி இளைப்பாறுங்கள். அதே பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் கிரியை செய்கிறார் மற்றும் உங்களுடன் இருக்கிறார் என்பதால் கவனக்குறைவாக இல்லாதிருங்கள்.

Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

பரிசுத்த ஆவியின் தனிப்பட்ட குணாதிசயங்கள் அவருடைய ஆள்த்துவத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் அவர் வேறுபட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

திரித்துவத்திற்குள் ஒரு தனி நபராக இருக்கிறார் என்பதை கருத நாம் தயாராக இருக்கிறோம்.

## தனித்தன்மை

ஆவியானவருக்கும் திரித்துவத்தின் மற்ற நபர்களுக்கும் இடையிலான வேறுபாடு முற்றிலும் தெளிவாக இல்லாத பல வேத பகுதிகள் வேதாகமத்தில் இருப்பதை ஒப்புக்கொள்வதன் மூலம் நாம் தொடங்க வேண்டும். உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் கலாத்தியர் 4:6 இல் தேவ குமாரனின் ஆவியாகவும், மத்தேயு 10:20 இல் பிதாவின் ஆவியாகவும் அடையாளம் காணப்படுகிறார். பல பெயர்கள் அவருக்கு உள்ளன. அவை திரித்துவத்தின் உறுப்பினர்களுக்கிடையேயுள்ள தனித்துவத்தை முன்னிலைப்படுத்துவதைக் காட்டிலும் அவர்களுக்கிடையிலுள்ள தொடர்புகளை உயர்த்திக் காட்டுகிறது.

ஆரம்பகால சபையில் இந்த வகையான வேத பகுதிகள் அதிக விவாதத்திற்கு ஆதாரமாக இருந்தாலும், இந்த நெருங்கிய தொடர்புகள் நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, திரித்துவத்தின் மூன்று நபர்களும் ஒரே தேவனாகவே இருக்கிறார்கள். ஆகவே, பரிசுத்த ஆவியானவரை பிதாவின் ஆவி என்றும் குமாரனின் ஆவி என்றும் நினைப்பதும் அர்த்தமுள்ளது தான், அதே நேரத்தில் அவர் அவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட நபர் என்று வலியுறுத்துவதும் சரியானதாக இருக்கிறது.

ஆவிக்கும் திரித்துவத்தின் மற்ற நபர்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தும் ஒரு வழி என்னவென்றால், அவர்களுக்கிடையிலான வேறுபாடுகளை வலியுறுத்தும் வழிகளில் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதைக் காட்டும் வேதத்தில் உள்ள பகுதிகளைப் பார்ப்பது தான் ஆகும். இந்த வேறுபாடுகளைக் காட்டும் பல வேத பகுதிகள் உள்ளன, ஆனால் ஆவியானவர் குமாரனிடமிருந்தும் பிதாவிடமிருந்தும் வேறுபடுகிறார் என்பதைக் காட்ட இரண்டு வேத பகுதிகள் போதுமானதாக இருக்கும். முதலில், யோவான் 16:7 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

> நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்: நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் (யோவான் 16:7) .

குமாரன் முதலில் போகாவிட்டால் பரிசுத்த ஆவியானவர் வரமாட்டார் என்று இயேசு இந்த சந்தர்ப்பத்தில் சொன்னார். ஒருவர் வருவதற்கு முன்பே ஒருவர் செல்கிறார் என்று கூறி ஆவியானவரிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டார் என்பது தெளிவாகிறது. ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பணிநோக்கம் இருந்தது, குமாரன் தன் பூமிக்குரிய வேலையை முடித்து பரமேறும் வரை ஆவியானவரின் பணிநோக்கம் தொடங்கப்படாது. ஆவியானவர் குமாரனிடமிருந்து வேறுபட்டவர் என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

இதேபோல், பிதாவிடமிருந்து அவரை வேறுபடுத்தும் விஷயங்களையும் ஆவியானவர் செய்கிறார். உதாரணமாக, நம் தேற்றரவாளனாக அவர் வகித்த பணிநோக்கத்தின் ஒரு பகுதியாக, பரிசுத்த ஆவியானவர் நமக்காக பரிந்து பேசுபவராக இருக்கிறார், அதாவது தேவன் முன் வழக்கை வாதிடுவதன் மூலம் நம் ஜெபங்களுக்கு உதவுகிறார்.

> பொதுவாக, **ஆவி**யானவரின் வேலையானது கிறிஸ்துவின் கிரியையை நமக்கு பயன்பட வைப்பதாகும். கிறிஸ்து நமக்காக ஒரு தியாகமாக தம் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். அந்த கிரியையை எடுத்து அதை நம் இருதயங்களில் பயன்படுத்துவது ஆவியின் வேலையாகும், எனவே இரண்டு பேரும் நமக்கு தேவை. அதாவது, நம்முடைய இருதயங்களில் இயேசு செய்த கிரியைகளை செயல்பட செய்வதற்கு ஆவியானவர் நம்மிடம் இல்லையென்றால், நாம் நல்ல நிலையில் இருக்க மாட்டோம், ஏனென்றால் கிறிஸ்துவின் கிரியை என்பது தேவன் நம்மை உள்ளே இருந்து மாற்ற விரும்புவதாகும். ஆகவே ஆவியானவர் வந்து மறுபடியும் நம்மை பிறக்க வைக்கிறார், நமக்கு புதிய பிறப்பைத் தருகிறார். ஆவியானவர் நம்மை பரிசுத்தமாக்குகிறார் – பரிசுத்தமாகுதலை நம்மில் நடப்பிக்கிறார் – ஆவியானவர் தொடர்ந்து நம் வாழ்வில் வரங்களையும் ஆசீர்வாதங்களையும் பலன்களையும் தருகிறார், எனவே **ஆவி**யானவரின் வேலை மிகவும் இன்றியமையாதது.
>
> Dr. ஜான் எம். ஃபிரேம்

ஒரு உதாரணத்திற்கு, பவுல் இந்த வார்த்தைகளை ரோமர் 8:26-27 இல் எழுதினார்:

> அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:26-27).

பரிசுத்த ஆவியானவர் பிதாவுடன் நமக்காக பரிந்து பேசுகிறார் என்று பவுல் போதித்தபோது, அவர்கள் தனித்துவமான நபர்கள் என்பதை நிரூபித்தார் – ஒருவர் பரிந்து பேசுகிறார், மற்றவர் பரிந்துரையை கேட்கிறார்.

> அவர் பிதாவிடம் பரிந்து பேசுகிறார். எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியாதபோது அவர் நம் இருதயத்திற்குள் பேசுகிறார், பவுல் சொல்வது போல் அவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார், ஆகவே நாம் என்ன சொல்கிறோம் என்று தெரியாத விஷயங்களை கூட தேவனிடம் சொல்கிறோம்.
>
> Dr. ஜான் எம். ஃபிரேம்

> குமாரனின் நாமத்திலும், பரிசுத்த ஆவியின் வல்லமையிலும் பிதாவிடம் ஜெபிப்பதே ஜெபத்திற்கான நெறிமுறை என்று நாம் கூறலாம். இருந்தாலும், நாம் தேவனின் ஒருமைப்பாட்டை சமரசம் செய்யாமலும் நம் பிரார்த்தனையின் பாதையை நிராகரிக்காமலும் பரிசுத்த ஆவியானவரிடம் நேரடியாக உரையாடக்கூடிய கிருபை மற்றும் சுதந்திரம் கொண்ட மதத்தின் உறுப்பினர்களாக நாம் இருக்கிறோம்.
>
> Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபிப்பதை பெரும்பாலும் பிரபலமாக்கியவர் சபை பிதாவாகிய அகஸ்டின் ஆவார். அவர் கி. பி. 354 முதல் 430 வரை வாழ்ந்தார், நம்முடைய தனிப்பட்ட ஜெபங்களுக்கு ஒரு அற்புதமான மாதிரியை அளிக்கிறார்:

> பரிசுத்த ஆவியானவரே,
> என் எண்ணங்கள் அனைத்தும் பரிசுத்தமாக இருக்கும்படி
> என்னில் சுவாசத்தைத் தாரும்;
> பரிசுத்த ஆவியானவரே,
> என் வேலையும் பரிசுத்தமாக இருக்க என்னில் செயல்படும்;
> பரிசுத்த ஆவியானவரே,
> பரிசுத்தமானதையே நான் நேசிக்க என் இருதயத்தை
> இயக்கும்;
> பரிசுத்த ஆவியானவரே,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரிசுத்தமான அனைத்தையும் பாதுகாக்க என்னை
> பலப்படுத்தும்;
> பரிசுத்த ஆவியானவரே,
> நான் எப்போதும் பரிசுத்தமாக இருக்கும்படி என்னைக்
> காத்துக்கொள்ளும்.

பரிசுத்த ஆவியின் ஆள்த்துவத்தை அவரது தனிப்பட்ட குணாதிசயங்களின் அடிப்படையிலும் பிதா மற்றும் குமாரனிடமிருந்து அவர் எவ்வாறு வேறுபடுகிறார் என்பதின் அடிப்படையிலும் பேசியிருக்கிறோம், இப்போது திரித்துவத்தின் மற்ற நபர்களுடனான அவரது உறவைப் பார்ப்போம்.

## உறவு

இந்த பாடங்கள் முழுவதும் நாம் குறிப்பிட்டுள்ளபடி, திரித்துவத்தில் உள்ள நபர்களுக்கிடையிலான உறவுகள் பாரம்பரியமாக இரண்டு வெவ்வேறு கோணங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இறையியலாளர்கள் இயக்கவியல் திரித்துவம் மற்றும் பொருளாதார திரித்துவத்தைப் பற்றி பேசியுள்ளனர். இவை இரண்டும் ஒரே திரித்துவத்தின் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று நபர்களின் முன்னோக்குகள் ஆகும். ஆனால் இந்த மூன்று தெய்வீக நபர்களுக்கிடையிலான உறவுகளின் வெவ்வேறு அம்சங்களை அவை வலியுறுத்துகின்றன.

இயக்கவியல் திரித்துவத்தைப் பற்றி நாம் பேசும்போது, தேவன் மற்றும் அவரின் இருப்பு குறித்து கவனம் செலுத்துகிறோம். இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பரிசுத்த ஆவியானவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் வல்லமையிலும் மகிமையிலும் சமமாக இருக்கிறார். தேவனின் மூன்று நபர்களும் எல்லையற்றவர்களும், நித்தியமானவர்களும் மற்றும் மாறாதவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நற்குணம் மற்றும் உண்மை போன்ற அடிப்படை தெய்வீக குணாதிசயங்களைக் கொண்டுள்ளனர்.

பொருளாதார திரித்துவத்தைப் பற்றி நாம் பேசும்போது, தேவத்துவத்தில் இருக்கிற நபர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்கிறோம். இந்த கண்ணோட்டத்தில், தேவத்துவத்தில் இருக்கிற ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு பொறுப்புகள், வெவ்வேறு அதிகாரம் மற்றும் வேறுபட்ட ஒதுக்கப்பட்ட பணிநோக்கம் உள்ளது. ஆவியின் அதிகாரம் பிதா மற்றும் குமாரனின் உயர்ந்த அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆவியின் பணிநோக்கம் பெரும்பாலும் அவர்களின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதும் அவர்களுக்கு மகிமையைக் கொடுப்பதும் ஆகும்.

> தேவன் எங்கெங்கு இருக்கிறாரோ, அவருடைய ஆவி
> அங்கெல்லாம் இருக்கிறது. அவருடைய ஆவி அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரசன்னத்தை மட்டுமல்ல, அவருடைய செயலையும் குறிக்கிறது. ஆகவே, தேவன் தனது சிருஷ்டிப்புடன் தொடர்புபடுத்துவதை நீங்கள் பின்பற்றும்போது, பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் அதை விவரிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் இப்போது மனித வரலாற்றை வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் உண்மையில் தேவனுடைய மிகுந்த பராமரிப்பு கவனம் மற்றும் அன்பின் முகவர் ஆவார்.

Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

கிறிஸ்தவ இறையியலில், இயக்கவியல் திரித்துவம் மற்றும் பொருளாதார திரித்துவம் இரண்டிலும், பரிசுத்த ஆவியானவர் மூன்றாவது நபர் என்று அழைக்கப்படுகிறார்.

அவர் இயக்கவியல் திரித்துவத்தின் மூன்றாவது நபர் ஆவார், ஏனென்றால் அவர் முதல் நபராகிய பிதாவிலிருந்தும் இரண்டாம் நபராகிய குமாரனிலிருந்தும் வருகிறார்.

இப்போது, கிழக்கத்திய பாரம்பரிய சபைகள் பரிசுத்த ஆவியானவர் பிதாவிலிருந்து மட்டுமே வருகிறார், குமாரனிலிருந்து அல்ல என்று போதிக்கின்றன என்பதை இங்கே சொல்ல வேண்டும். இந்த போதனையில் இந்த வேறுபாடு வர காரணம், கி. பி. 1054 இல் தொடங்கி இன்றுவரை தொடர்கிற கிழக்கு மற்றும் மேற்கத்திய சபைகளுக்கிடையேயான பிளவு ஆகும். நிச்சயமாக, இந்த சர்ச்சை எழுவதற்கு முன்னர் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* உருவாக்கப்பட்டதால், கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான இந்த கருத்து வேறுபாட்டை அது தீர்க்கவில்லை. சபையின் இரு கிளைகளும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யின் அனைத்து அறிக்கைகளையும் உறுதிப்படுத்துகின்றன.

பொருளாதார திரித்துவத்தைப் பொறுத்தவரை, பரிசுத்த ஆவியானவர் மூன்றாவது நபராக இருப்பதாகக் கூறப்படுகிறது, ஏனெனில் அவர் மூன்றாம் பதவியில் இருக்கிறார், பிதாவுக்கும் குமாரனுக்கும் கீழ்பட்டு இருக்கிறார். வேதவாக்கியங்கள் பல வழிகளில் அவருடைய கீழ்ப்படிதலைக் குறிக்கின்றன. உதாரணமாக, அவர் பிதாவாலும் குமாரனாலும் அனுப்பப்படுகிறார் அல்லது கொடுக்கப்படுகிறார். லூக்கா 11:13, யோவான் 14:26 மற்றும் 15:26, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:33 போன்ற பகுதிகளில் இதை வேதம் போதிக்கிறது. அவர் வரும்போது, பிதாவும் குமாரனும் அவருக்கு ஒப்புவித்த வேலையைச் செய்வதன் மூலம் ஆவியானவர் கீழ்ப்படிகிறார். யோவான் 16:13, ரோமர் 8:11, 1 பேதுரு 1:2 போன்ற இடங்களில் இதைக் கற்றுக்கொள்கிறோம்.

நிச்சயமாக, பொருளாதார திரித்துவத்தின் கண்ணோட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் மிகக் குறைந்த பதவியில் இருக்கிறார் என்று நாம் கூறும்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கூட, அவர் இன்னும் முழுக்க முழுக்க தேவன் தான் என்பதையும், சிருஷ்டிப்பின் ஒவ்வொரு அம்சத்திலும் முற்றிலும் சர்வ அதிகாரம் கொண்டவர் என்பதையும் வலியுறுத்துவது முக்கியம். மேலும், திரித்துவத்திற்குள், பரஸ்பர மரியாதை உணர்வு உள்ளது, ஏனெனில் ஒரு நபர் செய்கிற காரியத்தை மற்ற நபர்களும் செய்கிறார்கள். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் கீழ்ப்படிகிறார் என்பதால் அவர் அவர்களை விட இயல்பாகவே தாழ்ந்தவர் என்று அர்த்தமல்ல – அவர் அப்படி இல்லை. அவர்களின் அத்தியாவசிய தெய்வீகத்தன்மையில் அவர் அவர்களுக்கு முற்றிலும் சமமானவர்.

பரிசுத்த ஆவியின் ஆள்த்துவம் கிறிஸ்தவ இறையியலின் இன்றியமையாத பகுதியாகும். நாம் பார்த்தபடி, அதை உறுதிப்படுத்த பல காரணங்கள் உள்ளன. ஒரு தனித்துவமான, சுய உணர்வு கொண்ட நபர் என்று தெளிவாகக் குறிக்கும் குணாதிசயங்களை பரிசுத்த ஆவியானவர் கொண்டுள்ளார். பிதா மற்றும் குமாரனுடனான அவரது உறவுகள் மற்றும் தொடர்புகள் அவர் ஒரு துடிப்பாக செயல்படும் நபர் என்பதையும் வெறுமனே ஒரு புத்தியில்லாத சக்தியோ அல்லது வல்லமையோ அல்ல என்பதையும் சந்தேகமில்லாமல் காட்டுகின்றன. இந்த பாரம்பரிய கோட்பாட்டில் நமக்கு மிகுந்த நம்பிக்கை வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் பற்றிய இந்த பாடத்தில் இதுவரை, ஆவியின் தெய்வீகத்தன்மையை அப்போஸ்தலர்களின் 'விசுவாச அறிக்கைகள்' உறுதிப்படுத்தியதையும், அவருடைய முழு ஆள்த்துவத்தையும் பார்த்தோம். இந்த கட்டத்தில், நம்முடைய மூன்றாவது முக்கிய தலைப்பான பரிசுத்த ஆவியானவர் வரலாறு முழுவதும் செய்த மற்றும் இன்றும் தொடர்ந்து செய்து வரும் வேலை என்பதை உரையாற்ற நாம் தயாராக இருக்கிறோம்:.

# வேலை

ஆவியின் வேலையைப் பற்றி நன்கு புரிந்துகொள்வதன் ஒரு நன்மை என்னவென்றால், தேவன் நம்முடன் மிகவும் தனிப்பட்ட முறையில் செயல்படுகிறார் என்பதை அறிவதாகும். அவர் பொத்தான்களை அழுத்துவதில்லை. அவர் நம்மிடம் வந்து மிகவும் தனிப்பட்ட முறையில் நம்முடன் தொடர்பு கொள்கிறார். ஆகவே ஆவியானவர் உண்மையில் நம் இருதயங்களில் வாழ்கிறார். அவர் நம்முடனும் நமக்காகவும் ஜெபிக்கிறார். அவர் பரிசுத்த வரங்களை நமக்குத் தருகிறார், மற்றும் அவர் நம்முடன் பல வழிகளில் ஈடுபடுகிறார். உண்மையில், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், பவுல் கலாத்தியரில் சொல்வது போல்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கிறிஸ்தவ நற்பண்புகளின் பலன்களை அவர் நமக்குத் தருகிறார். சபையில் சேவை செய்வதற்காக அவர் நமக்கு பல வரங்களைத் தருகிறார், இவை அனைத்தும் ஆவியின் மூலம் தேவன் நம்முடன் செய்த கிரியையாகும்.
>
> Dr. ஜான் எம். ஃபிரேம்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* ஆவியின் வேலையைப் பற்றி அதிகம் விவரிக்கவில்லை என்றாலும், “நான் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்” என்று உறுதிப்படுத்துவதன் மூலம், இந்த விசுவாச அறிக்கை ஆவியின் வேலையைப் பற்றிய பல நம்பிக்கைகளைக் குறித்தது.

ஆவியின் வேலையை விவரிக்க பல வழிகள் உள்ளன, ஆனால் அதன் நான்கு அம்சங்களை ஆராய்வோம். முதலில், அவருடைய சிருஷ்டிப்பு வல்லமையைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவருடைய பரிசுத்தமாக்குதலின் ஊழியத்தில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, அவருடைய கிருபையின் ஊழியத்தைப் பற்றி பேசுவோம். நான்காவதாக, அவர் வழங்கும் வெளிப்பாட்டை விவரிப்போம். அவரது சிருஷ்டிப்பு வல்லமையுடன் ஆரம்பிக்கலாம்.

## சிருஷ்டிப்பு வல்லமை

“சிருஷ்டிப்பு வல்லமை” என்ற சொற்றொடர் புதிய விஷயங்களை உருவாக்கும் பரிசுத்த ஆவியின் திறனையும், சிருஷ்டிக்கப்பட்டதை நிர்வகிக்கும் மற்றும் மாற்றுவதற்கான திறனையும் குறிக்கிறது என்கிற அர்த்தத்தைத் தருகிறது.

> ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரமான ஆதியாகமம் 1 யை நீங்கள் வாசிக்கும்போது, ஆவியானவர் ஜலத்தின் மேலே அசைவாடிக்கொண்டிருந்தார். நீங்கள் கொலோசெயர் 1 க்கு திரும்பும்போது, கிறிஸ்து தான் சிருஷ்டிகர் என்பதை நாம் வாசிக்கிறோம், அவர் பரிசுத்த ஆவியின் மூலம் சிருஷ்டிக்கிறார். மறுபடியும் பிறத்தலில் ஆவியானவரும் ஈடுபடுகிறார். நாம் மனமாற்றமடையும் போது நமக்கு நடக்கும் மறு பிறப்பை இது குறிக்கிறது. ஆவியானவர் தான் மறுபிறப்பு அடையச் செய்கிறார். ஒருவன் ஆவியினால் பிறவாவிட்டால், அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. ஆனால் ஆவியானவர் நம்மை தனித்தனியாக மறுபிறப்பு அடையச் செய்வதில் மட்டுமல்ல, இந்த உலகத்தை மறுபிறப்பு அடையச் செய்வதிலும் ஈடுபடுகிறார். ஆகவே, பரிசுத்த ஆவியின் வேலையால் எல்லாம் மறுபிறப்பு அடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> காத்திருந்து சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது என்று ரோமர் 8 இல் பவுல் பேசுகிறார்.
>
> Dr. டெரெக் தாமஸ்

பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமை பற்றிய நம் கலந்துரையாடல் அவரது செயல்பாட்டின் மூன்று வெவ்வேறு நிலைகளில் கவனம் செலுத்தும். முதலில், இயற்கை உலகில் அவரது சிருஷ்டிப்பு வேலைகளைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அவர் சபைக்கு அருளும் ஆவிக்குரிய வரங்களில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, நமது ஆவியிலும் இருதயத்திலும் இருக்கிற தனிப்பட்ட புதுப்பித்தலில் அவரது பணிநோக்கைக் கருத்தில் கொள்வோம். இயற்கையான உலகில் அவரது சிருஷ்டிப்பு வல்லமை வெளிப்பட்ட விதத்தில் இருந்து ஆரம்பிக்கலாம்.

## இயற்கை உலகம்

இயற்கையான உலகில் பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமையானது முதலில் வேதத்தின் தொடக்க வசனங்களில் காணப்படுகிறது. முன்னதாக இந்த பாடத்தில், ஆதியாகமம் 1 இன் சிருஷ்டிப்புக் கணக்கில் ஆவியின் பணிநோக்கைப் பார்த்தோம், உலகத்தை ஒன்றுமில்லாமையில் இருந்து சிருஷ்டிக்க அவர் தெய்வீக சர்வ வல்லமையைப் பயன்படுத்தினார் என்பதைக் குறிப்பிட்டோம். சங்கீதம் 104:30 இல் இதேபோன்ற ஒரு கருத்தை நாம் காண்கிறோம், அங்கு பூமியையும் அதன் அனைத்து உயிரினங்களையும் சிருஷ்டிக்க தன்னுடைய ஆவியானவரை அனுப்பியதற்காக சங்கீதக்காரன் தேவனைத் துதித்தார். சிருஷ்டிக்கப்பட்ட வாரத்தில் மட்டுமல்ல தினமும் தேவனைத் துதித்தார். சங்கீதம் 33:6 இந்த கருத்தை எதிரொலிக்கிறது, யோபு 33:4 இல் இது குறிப்பாக மனிதர்களைக் குறிக்கிறது.

ஒரு உதாரணத்திற்கு, சங்கீதம் 104:30 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:

> நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர் (சங்கீதம் 104:30).

இந்த வசனத்தில், சிருஷ்டிப்பில் உள்ள அனைத்தும் இருக்கும் விதம் குறித்து சங்கீதக்காரன் தனது புரிதலை வெளிப்படுத்தினார். எல்லாவற்றையும் செய்தவர் தேவனுடைய ஆவியான பரிசுத்த ஆவியானவரே என்று கூறினார்.

இயற்கை உலகில் பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமையை, வேதத்தில் அவர் வல்லமையால் செய்த பல அற்புதங்களில் காணலாம். உதாரணமாக, பழைய ஏற்பாட்டில், யாத்திராகமம் 17:6 இல் உள்ள ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பாறையிலிருந்து தண்ணீரைப் பெற மோசேக்கு உதவினார். அவர் 1 இராஜாக்கள் 17 இல் விதவையின் மாவு மற்றும் எண்ணெயைப் பெருக்கினார்.

புதிய ஏற்பாட்டில், மத்தேயு 14 இல் ஐந்தாயிரம் பேருக்கும், மத்தேயு 15 இல் நான்காயிரம் பேருக்கும் இயேசு உணவளிக்க உணவைப் பெருக்குவதில் உதவினார். ரோமர் 8:11 ல் நாம் வாசிப்பது போல அவர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். ரோமர் 15:18-19 இல் நாம் கற்றுக்கொண்டபடி, பவுலின் எல்லா அற்புதங்களையும் ஊழியத்தையும் தம் பலத்தினால் நடப்பித்தார்.

நிச்சயமாக, அவருடைய மிகப் பெரிய அற்புதங்களில் ஒன்று கன்னி மரியாளை கருவுறச் செய்து இயேசுவை மனிதனாக பிறக்க வைத்தது ஆகும். லூக்கா 1:35 இல் கூறப்பட்டுள்ள இந்த குறிப்பிட்ட அற்புதம், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை*யில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் ஒரே வேலையாகும்.

இன்றும் கூட, சிருஷ்டிக்கவும், புதுப்பிக்கவும், மற்றும் சிருஷ்டிப்பு அனைத்தையும் தேவன் விரும்பிய இறுதி நிலைக்கு கொண்டு வர பரிசுத்த ஆவியானவருக்கு வியத்தகு வல்லமை உள்ளது.

உண்மையில், மனிதன் பாவத்தில் விழுந்ததால் வந்த அனைத்து விளைவுகளையும் அவர் முழுமையாக மாற்றியமைக்கும் வரை அவர் உலகத்தைப் புதுப்பிப்பது முடிவடையாது. ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து தடைசெய்யப்பட்ட பழத்தை சாப்பிட்டபோது, தேவன் அவர்களை சபித்தார் என்று ஆதியாகமம் 3 சொல்கிறது. முழு பூமியின் மீதும் தேவனின் துணை ஆட்சியாளர்களாக அல்லது பிரதிநிதிகளாக மனிதகுலத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டதால், ஆதாம் மற்றும் ஏவாள் மீதான தேவனின் சாபம் முழு சிருஷ்டிப்பையும் பாதித்தது.

அந்த நேரத்திலிருந்தே, பரிசுத்த ஆவியானவர் அதை மீட்டெடுப்பதற்கும் அதன் இறுதி நிலைக்கு கொண்டு வருவதற்கும் உலகில் செயல்பட்டு வருகிறார். இதன் விளைவாக ஏசாயா 65:17 மற்றும் 66:22, 2 பேதுரு 3:13, வெளிப்படுத்தின விசேஷம் 21:1 போன்ற இடங்களில் நாம் வாசிக்கிற புதிய வானங்களும் புதிய பூமியும் இருக்கும்.

இப்போது நாம் இயற்கையான உலகில் பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமையைப் பார்த்திருக்கிறோம், சபைக்கு ஆவிக்குரிய வரங்களை வழங்க அவர் தனது சிருஷ்டிப்பு வல்லமையை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## ஆவிக்குரிய வரங்கள்

ஆவிக்குரிய வரங்களைப் பற்றி பேசும்போது நம் மனதில் இது உள்ளது:

சபையை கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு கொடுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்கள்.

முன்பு இது இல்லாதவர்களுக்கு புதிய திறன்களை வழங்குவதன் மூலமோ அல்லது இயற்கையான திறமைகள் அல்லது அவற்றைப் பெறுபவரின் அனுபவத்திற்கு அப்பால் இருக்கும் திறன்களை அதிகரிப்பதன் மூலமோ ஆவியானவர் இந்த வரங்களை உருவாக்குகிறார்.

புதிய ஏற்பாட்டில் உள்ள ஆவிக்குரிய வரங்கள் விசேஷித்த, தனித்துவமான திறன்கள் ஆகும், இவை இயற்கைக்கு அப்பாற்பட்டவையாக கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் வெறும் திறமைகள் என்பதை விட அதிகம் என்பதை வலியுறுத்துவது முக்கியம் என்று நினைக்கிறேன். அவை ஒவ்வொரு விசுவாசிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்டவையாக அருளப்பட்டுள்ளன. ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு ஆவிக்குரிய வரமோ அல்லது ஆவிக்குரிய வரங்களோ இருக்கும்.

Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

ஆரம்பகால சபைக்கு பரிசுத்த ஆவியானவர் அளித்த வரங்களின் பட்டியல்கள் ரோமர் 12, 1 கொரிந்தியர் 12 மற்றும் எபேசியர் 4 போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இந்த வரங்களில் சில இயற்கையான திறமைகள் அல்லது உலகளாவிய மனித திறன்களை ஒத்திருக்கின்றன. சபைக்கு வெளியே உள்ளவர்கள் கூட ஒருவிதத்தில் வைத்திருக்கும் திறன்கள் இவை. ஏனென்றால் தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் – ஞானம், அறிவு, சேவை, கற்பித்தல், ஊக்குவித்தல், தாராள மனப்பான்மை, தலைமைத்துவம் மற்றும் இரக்கம் போன்ற காரியங்கள் அவர்களுக்கும் உள்ளன. ஆனால் மற்ற ஆவிக்குரிய வரங்களான குணப்படுத்துதல் மற்றும் அற்புதங்களைச் செய்தல் போன்றவை இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாகும். தீர்க்கதரிசனம் உரைத்தல், அந்நியபாஷைகளில் பேசுவது, பாஷைகளை வியாக்கியானம் செய்வது, ஆவிகளை பகுத்தறிதல் போன்ற சில வரங்கள் இயற்கையான திறன்களுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களுக்கும் இடைப்பட்டவைகளாக உள்ளன.

பரிசுத்த ஆவியானவர் அவருடைய சபைக்கு இயற்க்கைக்கு அப்பாற்பட்ட வரங்களை அளிக்கிறார் என்பதை இப்போது எல்லா கிறிஸ்தவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் இந்த பொதுவான ஒப்பந்தத்திற்குள், பல விதமான நுணுக்கமான கண்ணோட்டங்கள் உள்ளன. நவீன காலங்களில் பரிசுத்த ஆவியானவர் இயற்கையான திறமைகளை ஒத்த வரங்களை மட்டுமே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தருகிறார் என்று நம்பி சில சபைகள் இடைநிறுத்தப்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. அற்புதமான வரங்கள் அனைத்தும் அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு அல்லது வேதாகமம் முழுவதும் எழுதி முடிக்கப்பட்ட பிறகு இறந்துவிட்டதாக கருதப்படுகிறது.

மற்ற சபைகள் அடையாள அற்புத வரங்கள் இன்றும் தொடர்கின்றன என்று நம்பும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் அனைத்து வரங்களையும் ஆவியானவர் இன்னும் தருகிறார் என்று அவர்கள் நம்புகிறார்கள். இந்த நிலைபாட்டுக்குள்ளேயே, ஒரு கிறிஸ்தவன் எந்த வரங்களைப் பெற முடியும் என்று எதிர்பார்த்தல் குறித்து பல்வேறு கண்ணோட்டங்கள் உள்ளன.

இந்த இரண்டு உச்சநிலைகளுக்கு இடையில், பலவிதமான நடுத்தரமான கண்ணோட்டங்கள் உள்ளன. பரிசுத்த ஆவியானவர் விரும்பும் போது இன்னும் அற்புதமான வரங்களை வழங்க முடியும் என்பது நடுத்தரமான சபைகளின் நம்பிக்கை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவருடைய சபைக்கு எல்லா வகையான வரங்களையும் எப்போதும் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தவில்லை. இந்த சபைகள் எந்த நேரத்திலும் எந்த வகையிலும் பரிசுத்த ஆவியானவர் சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

ஆனால் இந்த நிலைப்பாடுகள் அனைத்திற்கும் பொதுவான ஒரு விஷயம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் தனது சபையின் நலனுக்காக தனது மக்களுக்கு குறைந்தபட்சம் சில வரங்களை தொடர்ந்து அளிக்கிறார் என்பதாகும். ஆவிக்குரிய வரங்கள் தேவனுடைய வல்லமையாகும், அவை ஒட்டுமொத்தமாக அவருடைய மக்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். அவை தனிநபர்களின் விருப்பங்களைத் தூண்டுவதற்காகவோ அல்லது தனிநபர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவோ வழங்கப்படவில்லை. மாறாக, ஊழியத்திற்காக சபைக்கு வல்லமை அளிக்கவும், அது கிறிஸ்துவில் முதிர்ச்சியடையும்படி வளரவும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதை ரோமர் 12:4-5, 1 கொரிந்தியர் 12:7, எபேசியர் 4:7-16 ஆகிய வேத பகுதிகளில் காண்கிறோம். 1 கொரிந்தியர் 12:7 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 12:7).

பவுல் இங்கே சுட்டிக்காட்டியுள்ளபடி, சபையின் நன்மைக்காகவே ஆவிக்குரிய வரங்கள் வழங்கப்படுகின்றன. திறமையான நபர்கள் தங்கள் சொந்த வரங்களிலிருந்தும் பயனடையலாம். ஆனால் வரங்களின் முதன்மை குறிக்கோள் மற்றும் கவனம் சபையின் நன்மை தான். அவை பரிசுத்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவியானவர் தனது சபையை முழுவதுமாக கட்டமைக்க பயன்படுத்தும் வல்லமையின் சிருஷ்டிப்பு வேலைகள் ஆகும்.

> ஆவிக்குரிய வரங்களைப் பற்றி நாம் அறிந்த மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், அவை கிறிஸ்துவின் சரீரமான சபைக்குள் உருவாகி, கண்டுபிடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஒருவன் அல்லது ஒருத்தி மட்டுமே அவற்றிலிருந்து பிரயோஜனப்படும்படிக்கு ஆவிக்குரிய வரங்கள் ஒருவருக்கு வழங்கப்படுவதில்லை. மக்கள் குழுக்களையும், விசுவாசிகளின் குழுக்களையும், அதாவது இயேசு கிறிஸ்துவின் சபையை கட்டுவதற்காக அவை கொடுக்கப்பட்டுள்ளன.
>
> Dr. ரியாட் காசிஸ், மொழிப்பெயர்ப்பு

> ஆவியால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வரங்கள், சபையை பக்திவிருத்தியடையச் செய்வதற்கும், சபையை கட்டியெழுப்புவதற்கும், கிறிஸ்தவ ஊழியத்தை செய்வதற்கும், ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துவதற்கும், மகா கட்டளையை நிறைவேற்றுவதற்கும் ஆகும். நம் நாளில் குறிப்பாக அந்நிய பாஷைகள் மற்றும் தீர்க்கதரிசனங்களில் உள்ள கவர்ச்சி உபதேச பிரச்சினைகளில் நாம் கொண்டுள்ள முதன்மை கவனமானது, உண்மையில் நாம் வேதத்தில் காணும் இரண்டாம் நிலை முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும். புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறபடி ஆவிக்குரிய வரங்களில் நாம் கவனம் செலுத்த விரும்புகிறோம் – இது நமக்கு ஆறுதலளிக்கிறது, இது புதிய உடன்படிக்கையின் யுகம் வந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது, ஆவியானவரின் தனிப்பட்ட கிரியை தனியாக நமக்குள்ளும், அதன் சமூகத்தினுள்ளும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் ஊழியத்தின் பணியை இந்த உலகில் நடப்பிக்கிறது. அந்த முக்கியத்துவத்தில் தான் உண்மையில் கவனம் செலுத்த வேண்டும், மேலும் உலகில் நாம் வாழும்போது நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சபையின் கூட்டு வாழ்க்கையிலும் இது எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று பார்க்க வேண்டும்.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவர் இயற்கையான உலகில் தனது சிருஷ்டிப்பு வல்லமையை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதையும், சபைக்கு ஆவிக்குரிய வரங்களை வழங்குவதையும் பற்றிய இந்த புரிதலுடன், ஒவ்வொரு விசுவாசியின் ஆவி மற்றும் இருதயத்தின் தனிப்பட்ட புதுப்பித்தலில் அவருடைய வல்லமை எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

## தனிப்பட்ட புதுப்பித்தல்

ஆவிக்குரிய மரண நிலையில் மனிதர்கள் பிறக்கிறார்கள் என்று வேதம் போதிக்கிறது. ரோமர் 5:12-19 குறிப்பிடுவது போல, ஆதாமின் பாவத்தினால் நாமும் குற்றவாளிகளாக இருக்கிறோம், அதன் விளைவாக மரணத்திற்கு உட்பட்டவர்களாயிருக்கிறோம். எனவே, இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக, தேவனுக்கு முன்பாக நம்முடைய ஆவிகளை உயிரடைய வைப்பதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம்மில் புதிய ஜீவனை உருவாக்குகிறார். இந்த புதிய ஜீவனைப் பற்றி வேதம் ஆவியில் பிறத்தல் மற்றும் மீண்டும் பிறத்தல் என்கிற அடிப்படையில் பேசுகிறது. இந்த மறுபிறப்பைப் பற்றி யோவான் 3:3-8, தீத்து 3:5, 1 யோவான் 5:1-18 மற்றும் பல இடங்களில் வாசிக்கிறோம். ஒரு உதாரணத்திற்காக, தீத்து 3:5 இல் உள்ள பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).

நாம் மறுபடியும் பிறந்த பின், கர்த்தரை நேசிக்கிற மற்றும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்த நபர்களாக நம்மை உருவாக்குவதற்காக, பரிசுத்த ஆவியானவர் நம் எண்ணங்களையும், உணர்வுகளையும், செயல்களையும் மாற்ற தொடர்ந்து செயல்படுகிறார். புதிய ஏற்பாடு ரோமர் 8:1-16, 1 கொரிந்தியர் 12:3, கலாத்தியர் 5:16-25, பிலிப்பியர் 2:13 போன்ற பகுதிகளில் இதைப் பற்றி பேசுகிறது. பரிசுத்த ஆவியினுடைய மாற்றத்தை உருவாக்கும் வல்லமையைப் பற்றிய நமக்கு மிகவும் தெரிந்த விவாதம் விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் உருவாக்கும் கனியைப் பற்றிய பவுலின் விளக்கமாகும். கலாத்தியர் 5:22-23 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலாத்தியர் 5:22-23).

அவர் இயேசு கிறிஸ்துவினுடைய ரூபத்திற்கு ஒத்த படி நம்மை மாற்றுவதால், நம்முடைய குணத்தில் இந்த மாற்றங்கள் அனைத்தும் பரிசுத்த ஆவியின் செயலினால், ஆக்கப்பூர்வமான வல்லமையால் விளைகின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நிச்சயமாக, கடைசி நாளில், பரிசுத்த ஆவியானவர் தனது சிருஷ்டிப்பு வல்லமையைப் பயன்படுத்தி அனைத்து உண்மையுள்ள கிறிஸ்தவர்களின் சரீரங்களை உயிர்த்தெழச் செய்வார், இயேசுவுக்கு இருந்த சரீரத்தைப் போன்ற பரிபூரணமான, அழியாத சரீரங்களை நமக்குத் தருவார். ரோமர் 8:23 இல் பவுல் இதைப் பற்றி சொன்னதைக் கவனியுங்கள்:

> அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:23).

கிறிஸ்துவின் சீஷர்கள் ஆவியின் முதல் பலன்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று பவுல் சொன்னபோது, அந்த வருஷத்தின் முழு அறுவடையின் பிரதிநிதித்துவ அடையாளமாக முதல் அறுவடையில் இருந்து காணிக்கைகளைக் கொண்டுவரும் பழைய ஏற்பாட்டு நடைமுறையிலிருந்து அவர் தனது மொழிநடையை அமைக்கிறார். அதேபோல், விசுவாசிகளில் பரிசுத்த ஆவியின் தற்போதைய வேலை என்னவென்றால் வரவிருக்கும் மிகப் பெரிய ஆசீர்வாதத்தின் முதல் பலன்களாக அவர்களை ஆக்குவது ஆகும். அவர் நம்மை முழுவதுமாக மீண்டும் உருவாக்கி, நம் சாபத்தையும் அழிவையும் நீக்கி, நம்மை ஒரு பழமையான, பாவமற்ற நிலைக்கு மீட்டெடுக்கும் வரை பரிசுத்த ஆவியின் வேலை முடிவடையாது. இதுவரை, ஆவியானவர் நம் ஆவியின் புதிய ஜீவனை தந்துள்ளார். ஆனால் அவர் இறுதியில் நம் சரீரங்களையும் மீண்டும் உருவாக்குவார்.

இப்போது நாம் பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமையின் கிரியைகளைப் பார்த்திருக்கிறோம், அவருடைய பரிசுத்தமாக்குதல் ஊழியத்தில் நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## பரிசுத்தமாகுதல்

ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்  ஊழியத்தைப் பற்றி நாம் பேசும்போது, ஜனங்களையும் பொருட்களையும் பரிசுத்தமாக்கும் செயலைப் பற்றி பேசுகிறோம். தேவனின் பயன்பாட்டிற்காக ஜனங்களையும் பொருட்களையும் வேறுபடுத்துவதற்கும், அவர்களைச் சுத்திகரிப்பதற்கும், அவருடைய வெளிப்படுத்தப்படாத மகிமைக்கு அருகில் வைப்பதற்கும் ஆவியானவர் செய்யும் வேலை இது. பல வழிகளில், இந்த கருத்தானது இந்த பாடத்தின் கடைசி பகுதியில் நாம் பார்த்த புதுப்பித்தல் கருத்துடன் நெருக்கமாக தொடர்புடையதாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியின் பிரசன்னம் மற்றும் ஊழியத்தால் சபை பரிசுத்தமாக இருக்கிறது அல்லது பரிசுத்தமாக்கப்படுகிறது என்று வேதம் அடிக்கடி கூறுகிறது. இந்த கருத்தை ரோமர் 15:16, 1 கொரிந்தியர் 6:11, 2 தெசலோனிக்கேயர் 2:13 மற்றும் 1

பேதுரு 1:1-2 போன்ற இடங்களில் காண்கிறோம். 1 கொரிந்தியர் 3:16-17 இல் பவுல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி பேசிய விதத்தைக் கவனியுங்கள்.

> நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? … தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் (1 கொரிந்தியர் 3:16-17).

பழைய ஏற்பாட்டில், யூத ஆலயம் தேவனின் பூமிக்குரிய அரண்மனையாக இருந்தது, அங்கு அவரது விசேஷித்த பிரசன்னம் இருந்தது. சாலொமோன் 2 நாளாகமம் 6:1 இல் அறிவித்தபடி, அது பூமியில் அவருடைய வீடாகும். ஆனால் புதிய ஏற்பாட்டில், தேவன் ஆலயத்தில் வசிக்கவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவர் சபையை புதிய ஆலயமாக பரிசுத்தப்படுத்தினார். இதே கருத்து எபேசியர் 2:22 இல் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் இது வேதத்தின் மற்ற பகுதிகளிலும் எதிரொலிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விசுவாசிகளுக்குள் வாசம் செய்வதன் மூலம் அவர்களை பரிசுத்தப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் உண்மையில் விசுவாசிகளின் இருதயங்களுக்குள் வாழ்கிறார் என்ற கருத்து இதுதான். ரோமர் 8:9-16, 1 கொரிந்தியர் 6:19, 2 தீமோத்தேயு 1:14, யாக்கோபு 4:5 போன்ற பல இடங்களில் இந்த வாசம் செய்தல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

> பரிசுத்த ஆவி விசுவாசியில் வாசம் செய்வது என்பது ஒரு இன்றியமையாத யதார்த்தமாகும். தேவன் இடைப்பட்டு கிறிஸ்தவர்களை கிறிஸ்துவில் புதிய சிருஷ்டிகளாக மாற்றும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களின் வாழ்க்கையை தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்கிறார். நாம் அவரைச் சார்ந்து இருப்பதும் அவருடைய உள்ளார்ந்த வல்லமையை விசுவாசிப்பதும் அத்தியாவசிய காரியமாகும், இல்லையெனில் நாம் மாம்சத்தில் வாழ்கிறோம் என்று அர்த்தம். ஆவியில் வாழ்வதற்கும் மாம்சத்தில் வாழ்வதற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் சொல்ல முடியும், ஏனென்றால் ஆவியில் வாழ்வதே கிறிஸ்துவை அவர் விரும்பும் விதத்தில் மகிமைப்படுத்த நமக்கு உதவுகிறது.
>
> Dr. கே. எரிக் தோனேஸ்

இந்த வாசம் செய்தல் பல பயன்களைக் கொண்டுள்ளது. சிலவற்றை பட்டியலிடலாம், அது நம்மை பாவத்திலிருந்து பரிசுத்தப்படுத்துகிறது, அது

நம்மை தேவனுக்காக வேறுபடுத்துகிறது, மேலும் நம்முடைய இருதயங்களிலும் மனதிலும் ஆவியின் செல்வாக்கை அனுபவித்து பயனடைகிறோம். 1 கொரிந்தியர் 6:9-11 இல் பவுல் இவற்றைப் பற்றி பேசிய விதத்தைக் கவனியுங்கள்:

> அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை .. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1 கொரிந்தியர் 6:9-11).

பரிசுத்த ஆவியின் பரிசுத்தமாக்குதல் வேலையின் மூலம், விசுவாசிகள் சுத்திகரிக்கப்பட்டு தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டுள்ளனர், இதனால் அவர்கள் இனி துன்மார்க்கர்களில் ஒருவராக கணக்கிடப்படுவதில்லை.

தேவன் உங்களுக்குள் வாசம் செய்வது எவ்வளவு விசேஷித்தமானது என்று நீங்கள் எப்போதாவது யோசிப்பதை நிறுத்தியிருக்கிறீர்களா? பிரபஞ்சத்தை உருவாக்கியவர் உங்களை மிகவும் நேசிக்கிறார், அவர் உங்களை நித்திய காலத்திற்குமாய் அவருடன் ஒன்றிணைத்துள்ளார். அவருடைய ஒப்புதலின் விளிம்பில் நீங்கள் தள்ளாட வேண்டாம். நீங்கள் அவருடைய இருதயத்திற்குள் ஆழமாக மறைந்திருக்கிறீர்கள். இந்த உறவானது பாவத்திற்கு எதிராக உங்களை பலப்படுத்துகிறது. சோதனையை எதிர்ப்பதற்கும், தேவனைப் பிரியப்படுத்தும் வழிகளில் வாழ்வதற்கும் இது உங்களுக்கு பலத்தைத் தருகிறது. நீங்கள் பாவம் செய்யும்போது – அது எவ்வளவு மோசமாக இருந்தாலும் – தேவனின் பார்வையில் நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறீர்கள். அவருடன் ஐக்கியம் கொள்வதற்கும், அவரை ஆராதிப்பதற்கும், நிச்சயமாக, அவருடைய மன்னிப்பைக் கேட்பதற்கும் பெற்றுகொள்வதற்கும் அவருடைய பிரசன்னத்திற்குள் நுழைய நீங்கள் இன்னும் தகுதியானவர்கள்.

இதுவரை, பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமையையும் அவருடைய பரிசுத்தமாக்கும் வேலையையும் நாம் பார்த்தோம். இந்த கட்டத்தில், அவர் தெய்வீக கிருபையை நிர்வகிக்கும் பல்வேறு வழிகளைப் பற்றி பேச நாம் தயாராக இருக்கிறோம்.

## கிருபை

பரிசுத்த ஆவி நிர்வகிக்கும் மூன்று வகையான கிருபையைப் பற்றி பேசுவோம்: அவையாவன: பொதுவான கிருபை, உடன்படிக்கை கிருபை மற்றும் இரட்சிக்கும் கிருபை. பொதுவான கிருபையை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பொதுவான கிருபை

மனிதர்களின் விசுவாசத்தைப் பொருட்படுத்தாமல், எல்லா மனிதர்களுக்கும் அவர் காட்டும் பொறுமையும் அவர்களுக்கு அவர் நல்கும் நன்மைகள் தான் பொதுவான கிருபை ஆகும். பரிசுத்த ஆவியானவர் எல்லா மக்களுக்கும் சமமான கிருபையை வழங்குவதில்லை. மாறாக, அவர் தனது திட்டங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப இங்கேயும் அங்கேயும் செயல்படுகிறார்.

உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் உலகில் பாவத்தைத் தடுக்கும் விதத்தில் பொதுவான கிருபை காணப்படுகிறது. ரோமர் 8:1-8 இல் பவுல் போதித்தபடி, பாவத்தில் வீழ்ச்சியடைந்த அவிசுவாசிகள் பாவத்தால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் இயற்கையாகவே தேவனுக்கு விரோதமாக இருக்கிறார்கள், அவர்கள் பாவத்தை நேசிக்கிறார்கள். ரோமர் 7–8 முழுவதும் பவுல் போதித்தபடி, பரிசுத்த ஆவியானவர் உலகில் பாவத்தை எதிர்த்துப் போராடுகிறார். விசுவாசிகளை அவர் மறுபடி பிறக்கச் செய்தபின் அவர் செயல்படும் விதத்திற்கு இது ஒத்ததாகும். அவிசுவாசிகளுக்கு இந்த ஆசீர்வாதத்தை பெரிய அளவில் அவர் வழங்கவில்லை என்றாலும், அவர்களால் முடிந்தவரை அவர்கள் பாவம் செய்யாதபடி அவர் அவர்களை அடிக்கடி கட்டுப்படுத்துகிறார் என்பது தான் உண்மை.

அவிசுவாசிகளுக்கு தேவைப்படும் அறிவு, அந்த அறிவால் அவர்கள் செய்யக்கூடிய நல்ல விஷயங்கள் ஆகியவை உலகில் சாதாரணமாக காணப்படும் பொதுவான கிருபையின் மற்றொரு அம்சம் ஆகும். மனிதகுலத்தின் மற்ற ஜனங்களோடு சேர்ந்து அவிசுவாசிகள் சபைக்கும் அதன் விசுவாசிகளுக்கும் பயனளிப்பதற்காகப் பயன்படுத்தும் பல மதிப்புமிக்க சத்தியங்களைக் கற்றுக் கொள்ளலாம். யாராவது பயனுள்ள ஒன்றைக் கண்டுபிடிக்கும் போதெல்லாம், அந்த அறிவு பரிசுத்த ஆவியானவரின் கிருபையான வரமாகும்.

கி. பி.1509 முதல் 1564 வரை வாழ்ந்த பிரபல புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதியான ஜான் கால்வின், பரிசுத்த ஆவியின் அறிவைக் குறித்த பொதுவான வரங்களை தனது படைப்பான *இன்ஸ்டிடூட்ஸ் ஒப் தி கிறிஸ்டியன் ரிலிஜியன்* என்கிற புத்தகத்தில், புத்தகம் 2, அத்தியாயம் 2, பிரிவுகள் 15 மற்றும் 16 இல் விவரித்தார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> மதச்சார்பற்ற எழுத்தாளர்கள் இந்த காரியங்களைக் குறித்து எழுதுவது நம் கவனத்திற்கு வரும்போது, அவற்றில் பிரகாசிக்கும் சத்தியத்தின் ஒளிரும் வெளிச்சம், மனிதனின் மனம், அதன் முழுமையிலிருந்து விழுந்து திசை திருப்பப்பட்டிருந்தாலும், அது தேவனின் அருமையான வரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்பதை நமக்குக்

போதிக்கட்டும். தேவனுடைய ஆவியை சத்தியத்தின் ஒரே நீரூற்று என்று நாம் கருதினால், நாம் சத்தியத்தை நிராகரிக்கவோ, எங்கு அது தோன்றினாலும் அதை வெறுக்கவோ மாட்டோம். ஆனால் அவரை நாம் அவமதிக்காமல் இருக்க வேண்டும்… ஆனால் கர்த்தர் விரும்பியிருந்தால் இயற்பியல், இயங்கியல், கணிதம் மற்றும் பிற துறைகளில் உள்ள தேவபக்தியற்றவர்களின் வேலை மற்றும் ஊழியத்தால் நமக்குக் கிடைக்கும் அவர்களின் உதவியைப் பயன்படுத்துவோம்.

## உடன்படிக்கை கிருபை

வேதத்தில் பல இடங்களில், பரிசுத்த ஆவியினால் நிர்வகிக்கப்படும் இரண்டாவது வகை கிருபையை நாம் காணலாம், இது சில சமயங்களில் உடன்படிக்கை கிருபை என்று அழைக்கப்படுகிறது.

உடன்படிக்கை கிருபையில் தேவன் தனது உடன்படிக்கை மக்களின் ஒரு பகுதியாக இருக்கும் அனைவருக்கும் அளிக்கும் சகிப்புத்தன்மை மற்றும் நன்மைகள் இருக்கின்றன. அவர்கள் உண்மையான விசுவாசிகள் இல்லையென்றாலும் கூட இது அவர்களுக்கு கிடைக்கிறது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் தேவனின் உடன்படிக்கை ஜனங்களாக இருந்தனர், ஏனென்றால் முழு தேசமும் ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் தேவன் செய்த விசேஷித்த உடன்படிக்கைகளின் கீழ் இருந்தது. புதிய ஏற்பாட்டில், தேவனுடைய உடன்படிக்கை ஜனங்கள் என்பவர்கள் காணக்கூடிய சபையாகும் , இதில் உண்மையான விசுவாசிகள் இல்லையென்றாலும் சபையுடன் தொடர்புடைய நபர்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. தேவனின் உடன்படிக்கை கிருபை அவருடைய பொதுவான கிருபையை விட மிகுதியாகவும் சகிப்புத்தன்மையுடனும் உள்ளது.

உதாரணமாக, இஸ்ரவேல் பெரும்பாலும் அவருக்கு விசுவாசமற்றதாக இருந்த போதும் அவருக்கு எதிராக பாவம் செய்த போதும், பண்டைய இஸ்ரவேலரிடம் தேவன் மிகவும் பொறுமையுடனும் இரக்கத்துடனும் இருந்தார். இஸ்ரவேலுடனான தேவன் செய்த உடன்படிக்கையின் காரணமாக, அவர் அவர்களை ஒரு தேசமாக அழிக்கவில்லை, ஆனால் எப்போதும் ஒரு விசுவாசமுள்ள மீதியானவர்களை பாதுகாத்தார். பவுல் இதைப் பற்றி ரோமர் 11:1-5 இல் வெளிப்படையாகப் பேசினார். மேலும், தேவனின் உடன்படிக்கை காரணமாக, பண்டைய இஸ்ரவேலில் அவிசுவாசிகள் கூட அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றனர். அநேகமாக இதற்கு மிகப் பெரிய உதாரணம் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் வெளியேறும்போது நடந்த நிகழ்வாகும். இந்த வசனங்களில் மோசே எழுதியதைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் அழுகையைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார் (யாத்திராகமம் 2:23-25).

தேவன் ஏன் இஸ்ரவேலின் மீது அக்கறை கொண்டிருந்தார், அவர்களை மீட்டார் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்ததால் அல்ல, ஆனால் அவர்கள் முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் அவர் செய்த உடன்படிக்கையில் அவர்களும் சேர்க்கப்பட்டிருந்ததால் அவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டனர் .

இதே காரியம் சபைக்கும் உண்மையாகப் பொருந்தும். உதாரணமாக, சபையின் ஒரு பகுதியாக இருக்கும் அனைவருக்கும் தொடர்ந்து சுவிசேஷமும் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது. சபைக்கு தேவன் அளிக்கும் அந்த ஆசீர்வாதங்களில் அவர்களும் பங்கு கொள்கிறார்கள். உண்மையில், எபிரெயர் 6:4-6 இல் நாம் கற்றுக்கொள்வது போல, சபையில் உள்ள அவிசுவாசிகள் சபையின் ஆவிக்குரிய வரங்களில் இருந்து கூட பயனடைகிறார்கள். இதனால்தான் சபையில் இருக்கிற அவிசுவாசிகள் தங்கள் துரோகத்தின் மூலம் கிருபையின் ஆவியை அவமதிக்கிறார்கள் என்று எபிரெயர் 10:29 கூறுகிறது.

> நாம் சபையில் கூடும் போது, இரட்சிக்கப்பட்டவர்களும் இரட்சிக்கப்படாதவர்களும் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் பிரசன்னத்தில் இருப்பதே இரட்சிக்கப்படாத மக்களுக்கு இருக்கக்கூடிய பயன் என்று நான் வெறுமனே சொல்லுவேன். அது ஒரு நல்ல காரியம். அதன் மூலம் தேவன் செய்வதை நம்மால் எப்போதும் சொல்ல முடியாது. ஆனால் அங்கு இருப்பது ஒரு நல்ல விஷயமாகும். ஜான் கால்வின், பொதுவான கிருபை பற்றி பேசினார்; ஜான் வெஸ்லி, தேவன் மனிதனை தீர்மானம் எடுக்க வைக்கும் கிருபையைப் பற்றி பேசினார் – இயேசு கிறிஸ்துவில் ஒருவர் விசுவாசம் வைப்பதற்கு முன்பு ஒரு நபரின் வாழ்க்கையில் கிருபை இப்படித்தான் செயல்படுகிறது. ஆகவே அந்த கிருபை கிரியை செய்கிறது, அநேகமாக இரண்டு முக்கிய வழிகளில் அது நடக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஒன்று, நம்முடைய பாவங்களைக் குறித்து நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உணர்த்தப்படுகிறோம். பாவம் உண்மையானது, அது நம்மில் சேதத்தை ஏற்படுத்துகிறது, அது மட்டுமல்லாமல் தேவனுடைய இருதயத்தையும் அது உடைக்கிறது. அதைப் பார்க்க நீங்கள் கிருபையின் இடத்தில் இருக்க வேண்டும். பின்னர், பாவத்தைக் குறித்த அந்த உணர்த்துதல் நம்மில் செயல்படத் தொடங்கும் போது, சில இறையியலாளர்கள் கூறியது போல், வாழ்வதற்கு மற்றொரு வழி இருக்கிறது, அதாவது வாழ்வதற்கு ஒரு சிறந்த வழி இருக்கிறது என்று நாம் உறுதியாக நம்ப ஆரம்பிக்கிறோம். குறிப்பாக இரட்சிக்கப்படாத நபர் கீழ்படிந்து வாழும்போது தங்கள் வாழ்க்கையில் தேவன் செயல்பாடுவார் என்று நம்பலாம், இதனால் சாதகமான புள்ளிகளிலிருந்து வாழ்க்கையை பார்க்கும் வாய்ப்பும் அந்த இரட்சிக்கப்படாத நபருக்கு கிடைக்கிறது.

Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

அவர்கள் உண்மையிலேயே சுவிசேஷத்தைக் கேட்கக்கூடிய சூழலில் தேவனுடைய ஏற்பாட்டின் மூலம் அவர்களை அது வைக்கிறது, அதில் அவர்கள் சுவிசேஷம் வாழ்வதை காணலாம், அதில் ஒரு குழுவான மக்களின் ஐக்கியத்தில் ஜீவனோடு இருக்கும் இயேசு கிறிஸ்து எப்படி இருக்கிறார் என்பதை அவர்கள் காண முடியும். ஆகையால், தேவனுடைய சர்வாதிகாரத்துவத்தில், ஒருவரை அவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு சபை வாழ்க்கைக்குள்ளாக கொண்டுவருவதற்கான தேவனுடைய வழியாக இருக்கலாம், இதனால் அவர்கள் சுவிசேஷத்திற்கு பதிலளிக்க முடிகிறது.

Dr. ஸ்டீவ் ப்ளாக்மோர்

## இரட்சிக்கிற கிருபை

இறுதியாக, பரிசுத்த ஆவியினால் நிர்வகிக்கப்படும் மூன்றாவது வகை கிருபையை பல இறையியலாளர்கள் இரட்சிக்கிற கிருபை என்று அழைக்கிறார்கள்.

இரட்சிக்கிற கிருபை என்பது கிறிஸ்துவின் பரிபூரண வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரம் ஏறுதல் மற்றும் தன்னை கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்பவர்களுக்கான அவருடைய மகிமையான இரண்டாம் வருகை ஆகியவற்றின் நித்திய நன்மைகளை நடைமுறைப்படுத்துதலாகும். ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியிடமிருந்து இரட்சிக்கிற கிருபையை பெறுகிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு இரட்சிக்கிற கிருபையை தருவதன் விளைவாக நாம் பெறும் ஆசீர்வாதங்கள் இயேசு நமக்கு செய்த கிரியையின் அடிப்படையில் ஏற்கனவே நமக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் பரிசுத்த ஆவியானவர் நமக்கு தரும் வரை அவற்றின் பலன்களை நாம் பெறத் தொடங்குவதில்லை. இந்த ஆசீர்வாதங்களில் மிகவும் வெளிப்படையானது நம்முடைய மறுபிறப்பு ஆகும், இதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம் ஆவிகளுக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறார், இதனால் நாம் மறுபடியும் பிறக்கிறோம். யோவான் 3:5-8, ரோமர் 8:2-11, தீத்து 3:5 போன்ற பகுதிகளில் இதை வாசிக்கிறோம். சகரியா 2:10, 1 கொரிந்தியர் 6:11, மற்றும் தீத்து 3:5-8 ஆகியவற்றில் நாம் காண்கிறபடி மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு மற்றும் நீதிமானாக்குதல் ஆகியவை பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகிற இரட்சிக்கிற கிருபைகளாகும். 2 தெசலோனிக்கேயர் 2:13 மற்றும் தீத்து 3:5 போன்ற இடங்களில் நாம் காண்பது போல, பரிசுத்த ஆவியினால் இரட்சிப்பு முழுவதுமாக நமக்கு கிடைக்கிறது என்று புதிய ஏற்பாடு பேசுகிறது.

கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட இரட்சிப்பைப் பற்றி பேசும்போது, நாம் இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய கிரியையில் கவனம் செலுத்துகிறோம். நிச்சயமாக இதைச் செய்வது ஒரு நல்ல விஷயம். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு அதில் இருக்கும் பங்கை அங்கீகரிப்பதும் முக்கியமாகும்.

> விசுவாசியில் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்வது கிறிஸ்தவ வாழ்க்கையை முழுமையாக்குகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை ஊக்குவிக்கிறார், கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கான விருப்பமும் வல்லமையும் பரிசுத்த ஆவியிலிருந்து வருகிறது என்பதை உணர்வது முக்கிய புரிதல் ஆகும். இது பரிசுத்த ஆவியானவர் நமக்கு என்ன செய்கிறார் என்பதைப் பற்றிய அந்த வளமான புரிதலின் ஒரு பகுதியாகும், அவர் தான் நம்மை தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ள வைக்கிறார். நாம் தேவனை வாஞ்சிக்கவும் தேவனின் காரியங்களை வாஞ்சிக்கவும் தேவனுடைய ஜனங்களை நேசிக்கவும் மற்றும் தேவனை சேவிக்கவும் தேவையான ஆவிக்குரிய பசியை அவரே தருகிறார். இது தனிநபரிடமிருந்து நிறைய அழுத்தங்களை நீக்குகிறது. ”இது எல்லாம் என் தோள்களில் உள்ளது, என்ன செய்ய வேண்டும் என்று தேவன் என்னிடம் சொன்னார், இப்போது அதைச் செய்ய வேண்டியது என் பொறுப்பாகும், கீழ்ப்படிய வேண்டியது என்னுடையது” என்று இப்படி சிந்திக்கும் நபரிடமிருந்து இது அதிக அழுத்தத்தை நீக்குகிறது.நமக்கு பொறுப்பு இருக்கிறது. தேவன் நமக்கு பதிலாக கீழ்ப்படிய மாட்டார், ஆனால் அவர் நமக்கு விருப்பத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பலத்தையும், நுண்ணறிவையும் தருகிறார் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். எல்லாம் அவரின் மகிமைக்காகத் தான்.
>
> Dr. டொனால்ட் எஸ். விட்னி

திரித்துவத்தின் வேறு எந்த நபரை விடவும், பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் அதிகம் செயல்படுகிறவராக இருக்கிறார், மன்னிப்பு, சந்தோஷம், நன்மை, பலம், சமாதானம் மற்றும் இரட்சிப்பின் மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் பெறுவதை உறுதிசெய்கிறார். ஆகவே, இவற்றை நாம் ஏராளமாகப் பெற விரும்பினால், அவருடைய இரட்சிக்கிற கிருபைக்காக நாம் அவரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். இதற்கு அப்பால், ஆவியின் உண்மை மற்றும் இரக்கத்திற்காக நாம் அவரை கனப்படுத்த வேண்டும். அவர் நமக்கு அளிக்கும் இரட்சிக்கிற கிருபை, நம்முடைய நன்றி, துதி, ஆராதனை மற்றும் நம்முடைய அன்பு ஆகியவற்றிற்கு அவரை பாத்திரராக ஆக்குகிறது.

இப்போது நாம் பரிசுத்த ஆவியின் சிருஷ்டிப்பு வல்லமை, பரிசுத்தமாக்குதல் மற்றும் கிருபை போன்றவற்றை ஆராய்ந்தோம், அவருடைய வெளிப்பாடு சம்பந்தப்பட்ட செயல்களை பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## வெளிப்பாடு

வெளிப்பாடு, சாட்சியம் மற்றும் புரிதல் ஆகியவற்றின் முகவராக பொதுவாக அடையாளம் காணப்படுகிற திரித்துவத்தின் ஒரு நபராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். இதை யோவான் 14:26, 1 கொரிந்தியர் 2:4,10, எபேசியர் 3:5 மற்றும் பல இடங்களில் காண்கிறோம். உண்மையில், ஆவிக்கும் வெளிப்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு மிகவும் நெருக்கமாக இருக்கிறது, ஆகையால் தான் யோவான் 14:17, 15:26, மற்றும் 16:13 போன்ற பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர் உண்மையில் சத்திய ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார். 1 யோவான் 5:6 இல், யோவான் இவ்வாறு சொன்னார்:

> ஆவியானவர் சத்தியமாக இருக்கிறார் (1 யோவான் 5:6).

இதேபோல், எபேசியர் 1:17 இல் ஆவியின் பணிநோக்கை பவுல் சுருக்கமாக இவ்வாறு அழைத்தார்:

> ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி (எபேசியர் 1:17).

ஆவியினுடைய வெளிப்பாட்டுக் கிரியையின் மூன்று அம்சங்களைப் பற்றி பேசுவோம். முதலில் பொதுவான வெளிப்பாட்டைக் குறித்து பேசுவோம். இரண்டாவது, விசேஷித்த வெளிப்பாட்டைக் குறித்து பேசுவோம். மூன்றாவதாக, ஒளியூட்டுதல் மற்றும் உள்நோக்கி வழிநடத்துவதில் கவனம் செலுத்துவோம். முதலில் பொதுவான வெளிப்பாட்டைக் குறித்துப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பொதுவான வெளிப்பாடு

பொதுவான வெளிப்பாடு என்பது: தேவன் தனது பிரசன்னம், இயல்பு, இருப்பு, செயல்கள் மற்றும் சித்தம் ஆகியவற்றை அனைத்து மனிதர்களுக்கும் தெரிந்திருக்கும்படி செய்ய இயற்கை உலகத்தையும் அதன் செயல்பாடுகளையும் தேவன் பயன்படுத்துகிற செயல் ஆகும்.

சங்கீதம் 8 மற்றும் 19, ரோமர் 1–2 போன்ற பல இடங்களில் பொதுவான வெளிப்பாட்டைக் குறித்து வேதம் பேசுகிறது. உதாரணமாக, ரோமர் 1:20 பொதுவான வெளிப்பாட்டைப் பற்றி இவ்வாறு பேசுகிறது:

> காணப்படாதவைகளாகிய அவருடைய – நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு – தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1:20).

இயற்கையில் பரிசுத்த ஆவியினுடைய வேலைகளின் சிருஷ்டிப்பு வல்லமையின் மூலமாகவே பொதுவான வெளிப்பாடு வழங்கப்படுகிறது என்று வேதம் பெரும்பாலும் கூறுகிறது – அதாவது சிருஷ்டிப்பின் செயலிலும், சிருஷ்டிக்கப்பட்டவைகளை தக்கவைப்பதிலும் இது வழங்கப்படுகிறது. இந்த வேலைகள் அனைத்தும் ஆவியின் சித்தத்திலிருந்தும் குணத்திலிருந்தும் வருகின்றன. ஆகவே, அவற்றில் அவருடைய கரத்தை நாம் அடையாளம் காணும்போது, அவருடைய இயல்பு மற்றும் நோக்கங்களைப் பற்றி அவை நமக்கு போதிக்கின்றன.

> பொதுவான வெளிப்பாட்டில் பரிசுத்த ஆவியின் பங்கு மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது, ஏனென்றால் அவர் சிருஷ்டிப்பின் முகவராக இருக்கிறார். தேவனின் பிரமாணங்களை நிலைநிறுத்துவதில் அவர் இன்னும் ஈடுபட்டுள்ளார் – நாம் சில சமயங்களில் இதை “இயற்கை சட்டங்கள்” என்று கூறுகிறோம். இது பரிசுத்த ஆவியானவர் வித்தியாசம் இல்லாமல் எல்லா மக்களுக்கும் கொடுக்கும் ஒரு வெளிப்பாடாகும், நிச்சயமாக, நாம் சில சமயங்களில் “விசேஷித்த வெளிப்பாடு” என்று அழைப்பதிலிருந்து இது வேறுபட்டிருக்கிறது, இந்த விசேஷித்த வெளிப்பாட்டின் மூலம் தான் நாம் இயேசுவை கர்த்தர் மற்றும் இரட்சகராக நம் இருதயத்தில் அவர் செய்கிற உள்ளான வேலையின் மூலம் அறிந்துகொள்கிறோம். ஆனால் பொதுவான வெளிப்பாடு

என்பது தேவனுடைய எல்லா சிருஷ்டிகளுக்கும் இருக்கிற ஒன்றாகும்.

Rev. Dr. சைமன் வைபர்ட்

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது என்று தேவன் கூறுகிறார். ஆகவே நாம் கண் திருப்புகிற இடமெல்லாம், தேவனின் வல்லமை, அவருடைய ஞானம், மற்றும் நற்குணத்தை, நம்மைச் சுற்றியுள்ள அனைத்து சிருஷ்டிப்பிலும் காண முடியும். பரிசுத்த ஆவியானவர் தேவனின் இந்த வெளிப்பாடுகளை வல்லமை வாய்ந்த வழிகளில் நம்மிடம் கொண்டு வருகிறார், ஆகவே நம்முடைய சிருஷ்டிகருடன் நாம் இணங்கியிருக்க வேண்டும்.

Dr. கே. எரிக் தோனேஸ்

## விசேஷித்த வெளிப்பாடு

உலகிற்கு பொதுவான வெளிப்பாட்டை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த வெளிப்பாட்டை முதன்மையாக சபைக்கு அளிக்கிறார்.

விசேஷித்த வெளிப்பாடு என்பது: தேவனின் நேரடி ஈடுபாட்டின் மூலமோ அல்லது அவருடைய தூதர்களை பயன்படுத்தியோ, அவரது இருப்பு, இயல்பு, பிரசன்னம், செயல்கள் மற்றும் சித்தம் ஆகியவற்றை மனிதகுலத்தின் ஒரு குறிப்பிட்ட நபர்களுக்கு தெரியப்படுத்தும் செயலாகும்.

பரிசுத்த ஆவியானவர் வேதம், தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள், தரிசனங்கள், தேவதூதர் வருகைகள் மற்றும் பிற அசாதாரண ஊடகங்களின் வடிவத்தில் விசேஷித்த வெளிப்பாட்டை வழங்கியுள்ளார். விசேஷித்த வெளிப்பாடு முதன்மையாக விசேஷித்த நபர்கள் அல்லது குழுக்களுக்கு வழங்கப்படுகிறது, குறிப்பாக தேவனின் இரட்சிப்பின் வாய்ப்பைப் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில், ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் விசேஷித்த வெளிப்பாடு பெரும்பாலும் வழங்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில், அது சபைக்கு வழங்கப்பட்டது. ஆவிக்குரிய வரங்களைப் போலவே, விசேஷித்த வெளிப்பாடு என்பது தேவனுடைய எல்லா மக்களின் நலனுக்காகவும், அனைவரையும் விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கும் கட்டியெழுப்புவதற்கும் வழங்கப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு அளித்த மிகப் பெரிய விசேஷித்த வெளிப்பாடு இயேசு கிறிஸ்துவின் அவதாரம் ஆகும். தேவனுடைய எல்லா வெளிப்பாடுகளின் உச்சம் என்று எபிரெயர் 1 நம்முடைய கர்த்தரைப் புகழ்கிறது. இப்போது கூட, பரிசுத்த ஆவியானவர் அவரால் அகத்தூண்டப்பட்டதும் எல்லா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காலத்திலிருந்தும் கிறிஸ்துவின் வார்த்தைகளை உள்ளடக்கியதும், அவருடைய அதிகாரப்பூர்வ தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் மூலம் நமக்கு அனுப்பப்பட்டதுமான வேதவசனங்களின் மூலம் நம்மை கிறிஸ்துவிடம் தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் வேதத்தை எழுதியது மத்தேயு 22:43, மாற்கு 12:36, அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:16, 4:25, மற்றும் 2 தீமோத்தேயு 3:16-17 போன்ற பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு உதாரணத்திற்காக, 2 பேதுரு 1:20-21 இல் பேதுரு எழுதியதைக் கவனியுங்கள்:

> வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:20-21).

அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு, ஆவியானவர் புதியதாக வேதம் எதையும் அகத்தூண்டுதலின் மூலம் இனி அருளுவதில்லை . ஆனால் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் அவர் வழங்கிய விசேஷித்த வெளிப்பாடு ஒவ்வொரு யுகத்திலும் கிறிஸ்தவர்களுக்கு அவருடைய சித்தத்தை தொடர்ந்து வெளிப்படுத்துகிறது.

மூன்றாவதாக, பொதுவான வெளிப்பாடு மற்றும் விசேஷித்த வெளிப்பாட்டை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவர் தனிநபர்களுக்கு வேத ஒளியூட்டுகிறார் மற்றும் உள்ளார்ந்த வழிநடத்துதலிலும் ஈடுபடுகிறார்.

## வேத ஒளியூட்டுதல் மற்றும் உள்ளார்ந்த வழிநடத்துதல்

> 2 பேதுரு 1:21 இல் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டபோது தேவனிடமிருந்து பேசினார்கள், இது சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலம் அருளியதை புரிந்துகொள்ள நமக்கு அறிவூட்டுவார் என்பதைக் குறிக்கிறது. புதிய வெளிப்பாடு எதுவுமில்லை, ஆனால் தற்போதுள்ள வெளிப்பாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், தேவனுடைய ஆவியால் நாம் வேத ஒளியூட்டப்படவும் பலப்படுத்தப்படவும் வேண்டும்.
>
> Dr. நாக்ஸ் சாம்ப்ளின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேத ஒளியூட்டுதல் என்பது அறிவு அல்லது புரிதலின் ஒரு தெய்வீக வரமாகும், இது முதன்மையாக அறிவாற்றலைக் குறிக்கிறது, அதாவது இயேசு மேசியா என்ற அறிவு ஆகும், இதைத் தான் பேதுரு மத்தேயு 16:17 இல் பெற்றார்.

உள்ளார்ந்த வழிநடத்துதல் என்பது முதன்மையாக உணர்ச்சி அல்லது உள்ளுணர்வு சார்ந்த அறிவு அல்லது புரிதலின் தெய்வீக வரமாகும். அதில் நம் மனசாட்சி போன்ற விஷயங்களும், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற உணர்வும் அடங்கும்.

வேத ஒளியூட்டுதலுக்கும் உள்ளார்ந்த வழிநடத்துதலுக்கும் எப்போதும் வேதாகமத்தில் தெளிவான வித்தியாசம் இல்லை. பெரும்பாலும், வேதம் இரண்டிற்கும் சமமாக பொருந்தும் வழிகளில் பேசுகிறது. 1 கொரிந்தியர் 2:9-16, எபேசியர் 1:17, கொலோசெயர் 1:9, 1 யோவான் 2:27 ஆகியவற்றில் இது போன்ற வேத பகுதிகளைக் காண்கிறோம். உதாரணமாக எபேசியர் 1:17 இல் பவுல் இவ்வாறு பேசினார்:

> நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்று இடைவிடாமல் வேண்டுகிறேன் (எபேசியர் 1:17).

இங்கே, பவுல் பரிசுத்த ஆவியானவரை "ஞானத்தின் ஆவி மற்றும் தெளிவின் ஆவி" என்று அழைத்தார். வேத ஒளியூட்டுதல் மற்றும் உள்ளார்ந்த வழிநடத்துதலின் வகைகளைப் பொறுத்தவரை, ஞானத்தை உள்ளார்ந்த வழிநடத்துதலாகவும் தெளிவை வேத ஒளியூட்டுதலாகவும் பார்க்க நாம் சோதிக்கப்படலாம். பவுலின் மனதில் இது இருந்திருக்கலாம். மறுபுறம், ஆவியின் இரு வேலைகளையும் அவர் ஒரு தெளிவான வேறுபாட்டைக் காட்டாமல் கூட்டாகக் குறிப்பிட்டிருக்கலாம்.

> நம் அனைவருக்கும் ஆவியின் வேத ஒளியூட்டுதல் தேவை, ஏனென்றால் நாம் அனைவரும் ஆவிக்குரிய ரீதியில் அது இல்லாமல் குருடர்களாக இருக்கிறோம். வௌவால்கள் உடல் ரீதியாக பார்வையற்றவைகளாக இருப்பது போல, நாம் ஆவிக்குரிய ரீதியில் பார்வையற்றவர்களாக இருக்கிறோம், அதாவது அவைகளால் சூரியனைப் பார்க்க முடியாது. ஆகவே, சூரியன் பிரகாசிக்கும்போது, அவைகள் பகலில் தங்களை மறைத்து குகையின் கூரையிலிருந்து கால்களால் தொங்குகின்றன. இரவில் வெளியே வரும்போதுதான் அவைகளால் பார்க்க முடியும். பகலில் வௌவால்களின் நிலை இருக்கிறபடி தான் நாமும் இருக்கிறோம். தேவனின் ஒளி பிரகாசிக்கிறது, ஆனால் பாவம் நம் ஆவிக்குரிய பெலனை சிதைத்ததால், தேவனுடைய உண்மை மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவருடைய வார்த்தையை நம்மால் கண்டறிய முடியவில்லை. தேவன் எப்படியும் இருக்கிறார் என்ற புத்திசாலித்தனமான விழிப்புணர்வு நமக்கு ஒருவேளை இருக்கலாம், ஆனால் வேதத்திலுள்ள கட்டளைகளும் வாக்குத்தத்தங்களும் நமக்கானவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறதில்லை. கர்த்தராகிய இயேசுவின் வேத விளக்கம் அவரை விசுவாசிப்பதற்கும் புதிய வாழ்க்கையில் நுழைவதற்கும் நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது. அந்த நேரத்தில் நாம் குருடர்களாகவும் செவிடர்களாகவும் நம் இருதயங்கள் கடினமாகவும் இருக்கின்றன, இதனால் தேவனுடைய வார்த்தை நம்மீது எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று புதிய ஏற்பாடு அழகாக கூறுகிறது. பின்னர், புதிய ஏற்பாடு கீழ்கண்டவாறு உண்மையில் சிருஷ்டிப்பில் நடந்த காரியத்தை கூறுகிறது, நான் இப்போது 2 கொரிந்தியர் 4 இல் இருந்து மேற்கோள் காட்டுகிறேன், "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன்," "இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்." அதுவே ஆவியினுடைய வேத ஒளியூட்டுதல் ஆகும், அந்த ஒளியூட்டுதல் நமக்கு வழங்கப்படும்போது, கிறிஸ்துவை ஆவிக்குரிய ரீதியில் காண்கிறோம், அவருடைய யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்கிறோம், அப்போது அவர் நம்மைத் தான் அழைக்கிறார் என்பதை நாம் கேட்டு உணர்கிறோம்.
>
> Dr. ஜே. ஐ. பேக்கர்

வேத ஒளியூட்டுதல் மற்றும் உள்ளார்ந்த வழிநடத்துதல் போன்றவற்றின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் தனது மக்களுக்கு அவர் வெளிப்படுத்திய சத்தியங்களை போதிக்க பயன்படுத்துகிறார். அதன்படி, இந்த ஊழியத்திலிருந்து பயனடைய குறைந்தபட்சம் மூன்று காரியங்களை நம் வாழ்வில் செய்ய முடியும். முதலாவதாக, வேதத்தைப் படிப்பதில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம், நாம் அதைச் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் பெரும்பாலும் நம்முடைய புரிதலுக்கு வழிகாட்டுவார் என்பதை அறிந்து கொள்ளவும் வேண்டும். இரண்டாவதாக, பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல், ஞானம், புரிதல் மற்றும் கீழ்ப்படிவதற்கான சித்தத்திற்காக தொடர்ந்து ஜெபிக்க நம்மை நாம் அர்ப்பணிக்கலாம். மூன்றாவதாக, ஆவியானவர் நமக்குக் போதிக்கும் சத்தியங்களின்படி வாழ்வதற்கான உறுதியுடன், நீதியுள்ள, பரிசுத்த வாழ்க்கைக்கு நம்மை அர்ப்பணிக்க முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பற்றிய இந்த பாடத்தில், பரிசுத்த ஆவியின் உபதேசத்தைப் பார்த்தோம். ஆவியின் தெய்வீகத்தை விசுவாச அறிக்கையின் அடிப்படையிலும் அதன் வேதாகம அடிப்படையிலும் நாம் பார்த்தோம். அவருடைய குணாதிசயங்களின்படியும் பிதாவுடனும் குமாரனுடனும் அவர் கொண்டிருந்த உறவின் வெளிச்சத்திலும் அவருடைய ஆள்த்துவத்தை ஆராய்ந்தோம். அவருடைய சிருஷ்டிப்பு வல்லமை, பரிசுத்தமாக்குதல், கிருபை மற்றும் வெளிப்பாடு போன்ற வேலைகளைப் பற்றி நாம் பேசியுள்ளோம்.

பரிசுத்த ஆவியைக் குறித்த உபதேசம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு வளமான ஊற்றாகும். எல்லா நேரங்களிலும் நம்முடைய நெருங்கிய உதவியாக இருக்கிற திரித்துவத்தின் மூன்றாவது நபரைப் பற்றி இது நமக்கு போதிக்கிறது. தேவனைப் பிரியப்படுத்தும் வழிகளில் வாழ நம்மை ஊக்குவிக்கவும் வல்லமை அளிக்கவும் வாய்ந்த மிகவும் பொறுப்பானவரை நோக்கி இது நம்மை சுட்டிக்காட்டுகிறது. தேவன் எல்லா நேரங்களிலும் உலகத்துடன் ஆழமாகவும் தனிப்பட்ட முறையிலும் ஈடுபடுகிறார் என்பதற்கும், அவர்மீது விசுவாசம் வைக்கும் அனைவரின் நலனுக்காக எப்போதும் செயல்படுகிறார் என்பதற்கும் இது மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.